THAGAM

# தாகம்

1 செப்டெம்பர் 1993 இதழ் 1



"என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை"


சிவரமணி

இருபத்தி நான்கு ஆண்டுகள்
துருக்கியின் தேசிய சினிமா
நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் குணே.


*'புரட்சி நடிகர்' எம்.ஜி.ஆரின் மரபார்ந்த
வளர்ச்சிக்கு எதிர்த்திசையிலானது*

## மூன்று சினிமாக்கள்

இல்மஸ் குணே



'பஞ்சபாண்டவர்கள்' என்று
ஒரு காலத்தில் வழங்கப்பட்ட
இயக்கங்கள் அனைத்துமே
அப்பாவி மக்களின் குருதியில்
தங்களுடைய கைகளைத்
தோய்த்தெடுத்தவர்கள்தான்



## படுகொலைகளின் கதை

## மெய்

சிறுகதை


FLAT 4
BEAL ROAD FRONTAGE
24 MANSFIELD ROAD
ILFORD
ESSES
1G1 3AZ

TELEPHONE:
081-553 2917
FACSIMILE:
081-553 2632

**Rengan N. Devarajan**
Solicitor

*With Compliments*

தரமான வீடியோ படப்பிடிப்பாளர்கள்




குறைந்த செலவில் திருப்தியான சேவைக்கு
ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்

**R S VISION**
69 SKEFFINGTON ROAD
EAST HAM
LONDON E6 2NA
081 - 471 5578

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



# 'வி.ஓ.ஏ'க்கு எதிர்ப்பு

இரணவில எனுமிடத்தில் 'அமெரிக்காவின் குரல்' (Voice of America) ஒலிபரப்புக்கான உபநிலையம் அமைக்கப் படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று ஒகஸ்ட் நடுப்பகுதில் நடைபெற்றுள்ளது. மூன்று மணித்தியாளங்களுக்கு மேல் நீடித்த இந்த ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டுள்ளனர்.

சிலாபம், இரணவில பகுதியில் இந் நிலையத்திற்காக 413 ஏக்கர் நிலத்தை நீண்ட கால குத்தகைக்கு இலங்கை அரசிடமிருந்து அமெரிக்கா பெற்றுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 1985 ஜனவரியில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டு, இந்நிலையத்தைக் கட்டுவதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. எனினும், இந்தியாவின் தலையீடுகளினால் பின்தள்ளப்பட்டு வந்தது.

தற்போது 60 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்நிலையம், 1995ன் பிற்பகுதியில் இயங்கத் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாம். *

# (சு)தந்திர அமெரிக்காவில் இனங்கள்...



"நம்பமாட்டீர்கள். எனது வாழ்கையில் அதிக சுமையானது எய்ட்ஸ் நோயோடு வாழ்வதல்ல. கறுப்பராக இருப்பதே. சந்தேகமே இல்லை இதில். இப்போது கூட இது (கறுப்பராக இருப்பது) ஒரு மேலதிக சுமையை என் மேல் கட்டி ஏற்றினாற்போல் தொழிற்படுவதை உணர்கிறேன்."

– எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டு மெதுவாக இறந்து கொண்டிருக்கும் முந்நாள் விம்பிள்டென், டென்னிஸ் ஆட்டக்காரரும் எழுத்தாளருமான ஆதர் ஆஷ் (Arthur Ashe) *

# என்ன கணக்கு?

பத்து வருடத்திற்கு மேலான உள்நாட்டு போரினால் எல்சல்வடோரில் இருந்து வெளியேறிப் போன 5 இலட்சம் அகதிகள் கிட்டத்தட்ட 600 மில்லியன் அமெரிக்க டொலரை வருடமொன்றிக்கு தமது நாட்டிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இதனைப்போல, இலங்கையில் இருந்து வெளியேறிய 2 இலட்சத்துக்கு அதிகமான தமிழ் அகதிகளாகிய நாம் ஆண்டுக்கு எவ்வளவு பணத்தை எமது புகலிடங்களில் இருந்து வெளியில் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்?

*தோராயமாய் 240 மில்லியன் அமெரிக்க டொலராய் இருக்க வேணும்.* *

# இவருமா இப்படி!

டோனால்ட் டக் எனும் பிரபல்யமான கார்ட்டூன் கதா பாத்திரத்தை உருவாக்கிய வோல்ட் டிஸ்னி, அமெரிக்க உள்நாட்டு உளவுத்துறையிலும் வேலை செய்திருக்கிறார் என்ற விஷயம், அவர் இறந்து இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் வெளி யுலகத்துக்குத் தெரிந்திருக்கிறது!

"கொம்யூனிசக் கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்த நட்சத்திரங்கள் மற்றும் இயக்குநர்களை இனம்கண்டு உளவுத்துறை(FBI)க்குத் தகவல் கொடுப்பதுதான் அப்போது வோல்ட் டிஸ்னிக்கு வேலை..." என்று அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கும் மாக் இலியிட் குறிப்பிடுகிறார். *

## வாசகர்களுக்கு...

இந்தப்பகுதியில் நீங்களும் ஏன் பங்களிக்கக் கூடாது. பயனுள்ள புதினங்களை எங்களுடனும் மற்றைய வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்ளலாம்தானே.

நீங்கள் 'சேதிகள்' அனுப்பும் போது உங்கள் பெயர், விலாசம் போன்ற விபரங்களைக் குறிப்பிடத் தவறவேண்டாம்.

ஆரோக்கியமானவை பிரசுரிக்கப்படும்.

# தாகம்

இதழ் 1
1 செப்டெம்பர் 1993

தாகம்
தமிழில்
இன்னுமொரு
காத்திரமான
வாசிப்பு

வெளியீடு:
மேலைக்காற்று

அச்சுப்பதிப்பு:
நீயூ ரெக்

சிவா



உங்களது
விமர்சனங்கள்,
படைப்புகள்
அனுப்பவேண்டிய
முகவரி,
மற்றும்
தொடர்புகளுக்கு...

THAGAM
PO BOX 3186
LONDON E17 6TJ


## நாமும் புதிதாக...

பேரின மேலாதிக்கம் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, எமது வாழ்வியல் அடித்தளங்களை கோரமாக உலுப்பி அழித்து வருகிறது. எனவே இக்காலத்தில் எமது 'தலைவிதி' யதார்த்தமான ஓர் அரசியல் அர்த்தம் தேடி நிற்பது போல், அகதிகளான எமது மீட்சிக்கான வாசிப்பு, விடுதலைக்கும் ஜனநாயகத்திற்குமான மொழி சார்ந்து வளர்வதே ஒன்றை யொன்று அர்த்தமுள்ளதாக்கும்.

ஆனால் எமது சொந்த மண்ணில் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட போது, ஜனநாயக மறுப்புக்கெதிராய் உயிர்த்த குரல்கள் காணாமல் போனபோது, முஸ்லிம் மக்கள் அடாவடித்தனமாக வெளியேற்றப்பட்ட போது மௌனிகளாய் இருந்த புகலிடங்களில் வெளிவரும் முன்னணித்தமிழ்ப் பத்திரிகைகள், கொழுந்து விட்டெரியும் அரசின் பேரினவாத அராஜகத்தில் குளிர் காய்ந்து காலம் தள்ளுவதே பிழைப்பாகக் கொண்டுள்ளன.

அகதிகளாக பெருமளவில் வெளியேறி வாழும் எமது சமூகத்திற்கு, 'விடுதலை' யுத்தத்தின் அக, புற நிலைகளின் புதிய விச்சங்களை அடையாளம் காட்டத் தவறி வருகின்றன. 'களத்தின்' உண்மை நிகழ்வுகள் வெளி உலகுக்கு 'தரிசனம்' பெறுவதை மறுத்து அல்லது மறைத்து வருகின்றன.

ஒத்து ஊதியே பழக்கப்பட்டன இப்பத்திரிகைகள்.

சில வேளை எப்போதும் இப்படியேதான் இருந்தும் வரும்.

எனவே,
மனித வாழ்வின் பெறுமதி பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்துதான் நாமும் புதிதாக ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

மனித விழுமியங்கள் ஒரு யுத்த காலத்திலும் கூறும் செய்திதான் என்ன?

மனிதன் மகத்தானவன்!



# படுகொலைகளின் கதை

அநுராதபுரத்தில் படுகொலைகள் நடந்து சென்ற மே மாதத்துடன் எட்டு வருடங் களாகின்றன. பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டமை தமிழ் மக்களுடைய போராட்டத்தில் ஒரு திருப்புமுனை என்று அரசியல் அவதானிகள் ஏற்கனவே குறித்து வைத்திருக் கிறார்கள். இந்தத் திருப்பு முனைதான் போராட்டத்தின் இலட்சியங்களையும் மானுட விழுமியங்களையும் குழிதோண்டிப் புதைத்து விட்டது என்பது சற்று நிதானித்து நோக்கு பவர்களுக்குத் தெரியும் என்று நம்புகின்றேன். வல்வெட்டித்துறை–அநுராதபுரம்–குமுதினிப்படகு என்று பழிவாங்கும் படலங்கள் முடிவற்றவையாக இருக்கின்றன. நச்சுச் சுழல் போலத் திரும்பித்திரும்பி வரும் அப்பாவிப் பொது மக்களின் படுகொலைகள் விடுதலையை எவர்க்கும் வாங்கித் தந்துவிடப் போவதில்லை.

அநுராதபுரம் படுகொலைகள் பற்றிய தகவல் யாழ்ப்பாணத்தில் பரவிய வேளை நானும் என்னுடைய நண்பர்கள் சிலரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துச் சிற்றுண்டிச்சாலையில் மூலை மேசையொன்றில் இருந்து கதை வளர்த்துக் கொண்டிருந்தோம். படுகொலைகள் பற்றிய தகவல் அப்போது எங்களுக்கு எட்டியிருக்கவில்லை. நண்பரொருவர் இந்தச் செய்தியை எமக்கு வந்து சொன்ன போது முதலில் எம்மில் பலருக்கு அதை நம்புவது சிரமமாக இருந்தது. ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிற்பாடு திலீபன் சிற்றுண்டிச்சாலைக்குள் வந்தார். நாங்கள் கும்பலாக அமர்ந்து பேசிக்கொண்டிருப் பதைக் கண்டதும் அவர் எங்களை நோக்கி வந்து எம்முடைய கதையாடலில் இணைந்து கொண்டார். (அன்று அந்த நேரம் எம்முடனிருந்தவர்களில் சிலர்–திலீபன் உட்பட– இறந்து போய் விட்டார்கள். ஒருவர் 'காணாமல்' போய் விட்டார். ஏனையோர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந் துள்ளோம்!) எங்களைப் பார்த்து திலீபன் முதலில் கேட்ட கேள்வி–

"எப்படி எங்கடை வேலை."

அந்தக் கேள்வியை அவ்வளவு தூலாம்பரமாக நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அப்படியான ஒரு கேள்வியைக் கேட்டபோது திலீபனின் முகத்தில் ஒரு விவரிக்க முடியாத குரூரம் படர்ந்திருந்ததாக எனக்குத் தோன்றியது. அநுராதபுரம் படு கொலைகளை அவர் நியாயப்படுத்தியும் அதனை நாங்கள் மறுத்து நடாத்திய காரசாரமான கதை யாடலை விவரிப்பது இப்போது என்னுடைய நோக்கமல்ல. எனினும் அவருடையதும்–அவரூடாக வெளிப்பட்ட விடுதலைப் புலிகளின் மறைமுகமான நியாயப்படுத்தலையும் சுருக்கமாக வேனும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

"சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்களைக் கொல்வதை கிரமமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இது பற்றிச் சிங்கள மக்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. வடக்கு கிழக்கில் என்ன நடந்தாலும் அதை மூடி மறைத்து விட்டுத் தெற்கில் சாதாரணமாக ஆட்சியை நடாத்திக்

**சேரன்**

கொண்டு சென்று விடலாம் என்று நினைக்கிறது அரசு. எனவே யுத்தத்தை எதிரியின் பிரதேசத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். மேலும் யுத்தத்தின் போது பொதுமக்கள் கொல்லப்படுவ்து தவிர்க்க முடியாது. சிலவேளைகளில் எதிரிக்கு அவனுக்குப் புரியக் கூடிய மொழியிலேயே நாம் பதில் சொல்ல வேண்டும்."

இந்த நிலைப்பாட்டுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துப் போவதற்கு ஏராளமான வர்கள் நம்மிடையே இருப்பார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்தி ஒரு பல்கலைக்கழக ஆசிரியர் முன்பொருதரம் வாதாடியதும் எனக்கு நினைவில் இருக்கிறது. அப்பாவிச் சிங்கள மக்களையும் முஸ்லீம் மக்களையும் கொன்று குவிப்பது விடுதலைப் புலிகளின் ஏக போகம் மட்டுமல்ல. எல்லா இயக்கங்களும் - குறிப்பாக 'பஞ்சபாண்டவர்கள்' என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்ட LTTE, EPRLF, TELO, EROS, PLOTE ஆகிய இயக்கங்கள் அனைத்துமே அப்பாவி மக்களின் குருதியில் தங்களுடைய கைகளைத் தோய்த்தெடுத்தவர்கள்தான்.

> **படுகொலைகளை நியாயப்படுத்த முடியும் என்றால், ஐ.நா சபையிலும் சர்வதேச அரங்குகளிலும் மனித உரிமை ஆணைக் குழுக்களிலும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்களே என்று குரலெழுப்ப எங்களிடம் என்ன தார்மீக யோக்கியதை இருக்கிறது.**

நிக்கவெரட்டிய வங்கிக் கொள்ளையின் போது கொல்லப்பட்ட ஒரு சிங்கள பொலிஸ்காரருக்காக மனம் வெந்து, துயருற்றுத் துண்டுப் பிரசுரம் வெளியிட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் (PLOTE) வன்னிக் காட்டுக்குள் திசை தப்பி வந்த எத்தனை சிங்கள உழவர்களைக் கொன்று புதைத்தார்கள் என்பதற்குக் கணக்கில்லை. தங்களுடைய 'சி.வி' யில் (Curriculam Vitae!) இடம் பெற்றுள்ள தாக்குதல்களின் எண்ணிக்கை போதாது என்ற 'வெம்பியாரத்தில்' மன்னாரில் இராணுவத்தை வெளியேற வைப்பதற்காக நீண்ட காலமாக அங்கு குடியிருந்த ஒரு சிங்களக் குடும்பத்தையே வெட்டிச் சரித்தவர்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் (TELO). கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் களையப்பட்ட பொலிஸ்காரர்களில் முஸ்லிம்களை மட்டும் பிரித்தெடுத்துக் கொன்றவர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியினர் (EPRLF). மன்னாரில் பள்ளி வாசலில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து முஸ்லிம் மக்களைக் கொன்று முஸ்லிம் மக்களின் சங்காரத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் ஈழப்புரட்சி அமைப்பினர் (EROS). என்னுடைய நண்பர் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்த போது அவருக்குத் தளபதி கிட்டுவால் வழங்கப்பட்ட முதலாவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் அப்போது இருந்த சிங்களக் கடை யொன்றுக்குக் கைக்குண்டு எறிவது! இந்தத் தகவல்கள் எல்லாம் முன்னால் வீரர்கள் என்னிடம் தெரிவித்தவை! மொத்தத்தில், கறைபடாத கரங்கள் எவரிடமும் இல்லை என்பதை இப்போதாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவ இலக்குகளைத் தவிர ஏனைய 'மென்மையான இலக்கு'களைத் தாக்குவதில்லை என்ற பாரம் பரியத்தை மிகவும் நீண்ட காலமாகக் கடைப்பிடித்து வந்திருந்த இரண்டு விடுதலை இயக்கங்கள் - கிழக்குத் திமோரின் FRETILIN உம் தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசியக் கொங்கிரசுமாகும் (ANC). இவற்றுள்ளும் உட்கட்சி மோதல்களும் கொலைகளும் இடம் பெற்றுள்ளதாக இப்போது அதிருப்தி யாளர்களால் குற்றம் சுமத்தப்படுகின்ற போதும் கிடைத்த தகவல்களைக் கொண்டும் அண்மையில் சந்திக்க முடிந்த இரண்டொரு அதிருப்தியாளர்களின் தகவல்களைக் கொண்டு பார்க்கிற போதும் தமிழ் விடுதலை இயக்கங்கள் புரிந்துள்ள அளவுக்குப் படுகொலைகள் புரிந்த விடுதலை இயக்கங்கள் இப்போது இல்லையென்று தான் தோன்றுகின்றது. (கம்போடியா விதிவிலக்கு!)

இத்தகைய படுகொலைகளைச் சாதாரணமாக

ஒதுக்குவதும், பாராமுகமாக இருப்பதும், நியாயப்படுத்துவதும் மேலும் மேலும் எங்களை இராணுவமயப்படுத்தப்பட்ட ஒரு சமூகமாக மாற்றி விடுகிறது. 'அவர்கள் கொல்லலாம் நாங்கள் கொல்லக்கூடாதா?' என்று கேள்வி எழுப்புவர்கள் நம்மிடையே உள்ளனர்தான்.

படுகொலைகளை நியாயப்படுத்த முடியும் என்றால் ஐ.நா சபையிலும் சர்வதேச அரங்குகளிலும் மனித உரிமை ஆணைக் குழுக்களிலும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்களே என்று குரலெழுப்ப எங்களிடம் என்ன தார்மீக யோக்கியதை இருக்கிறது?

இத்தகைய படுகொலைகளுக்கு 'உரிமை கோரும்' குறைந்த பட்ச நாணயம் கூட எமது இயக்கங்களிடம் கிடையாது. (இப்படி உரிமை கோருவது அரசியல் தற்கொலை, மற்றும் அது ராஜதந்திரமும் அல்ல என்று இன்னொரு யாழ் பல்கலைக்கழகச் சிந்தனையாளர் என்னிடம் தெரிவித்த ஞாபகமும் இப்போது எழுகிறது.) அநுராதபுரம் படுகொலைகளைப் பொறுத்தவரை சென்னையில் வைத்துக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த திலகர் புலிகள் அதற்குப் பொறுப்பல்ல என்று தெரிவித்ததோடு நின்று விடாமல் அது ஒரு 'பயங்கரவாதச் செயல்' என்று வேறு வர்ணித்தார். நல்ல காலம் உண்மைகளை மக்கள் எந்த விடுதலை இயக்கத்திடம் இருந்தும் எதிர்பார்ப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் ராதா கொல்லப்பட்ட போது வெளியான ஏராளமான அஞ்சலிப் பிரசுரங்களில் ரியூட்டரி ஒன்றினால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்று "சிங்களத் தலைநகரை நடுநடுங்க வைத்த" தளபதி என்ற மாதிரியான வாசகங்களைப் பயன்படுத்தியிருந்தது.

மக்களுக்கு உண்மையைச் சொல்லாத எந்தப் போராட்டமும் வெற்றி பெற்றதில்லை. வெறும் லேபல் மாற்றம்தான் ஈழப் போராட்டத்தின் குறி என்றால் உமாமகேஸ்வரன் திட்டமிட்டபடி மாலைத்தீவுகளில் ஆளற்றுக் கிடக்கும் ஏதாவதொரு சிறு பவளத்தீவில் ஈழப் பிரகடனம் செய்வது தான் புத்திசாலித்தனம்! □ □ □

# தவறிய பருவங்கள்

பனிப்பூக்களே,
பனிப்பூக்களே,
ஏன் கொடுகிக்கொண்டிருக்கிறீர்கள்
உறைந்த கூதலா?
உங்களுக்கு முன் ஒரு பனிப்பாலையா?

பனிப்பூக்களே, பனிப்பூக்களே
ஏன் கொடுகிக்கொண்டிருக்கிறீர்கள்

இந்த நதி உறைந்திருக்கிறதா?
பார்வைக்கு இது பனிப்பாளம்
கிட்ட வந்து தொட்டுப்பாருங்கள்—
இதன் கண்டிப்பும் இறுக்கமும்
ஒரு மெல்லிய ஓடுதான்.
உங்கள் தோலைப்போல் மெல்லியது.
உங்கள் இதயச்சுவர்போல்
துடிப்புடையது—
இந்த நதியினுள்
கைவிட்டுப் பாருங்கள்
இந்த இதயத்தினுள்
விரலை விட்டுப் பாருங்கள்
நகச்சூடு—
98.4° F
0° C அல்ல
காதைவைத்துக் கேளுங்கள்
'களகள'வென்ற பிரவாகிப்பு கேட்கவில்லையா?
'டிக்டிக்' என்று இதய வால்வுகள்
சப்திக்கவில்லையா?
இந்த ஓட்டை உடைக்கத்தான் தெரியவில்லை
உங்களுக்கும் எனக்கும்.
ஓ!
பனிப்பூக்களே, பனிப்பூக்களே!
இந்த நதி இனித் திரும்பிவராது.

சண்முகம் சிவலிங்கம்
நீர் வளையங்கள்

மூன்று சினிமாக்கள்

# இல்மஸ் குணே

## கலைஞன் மற்றும் புரட்சிக்காரன்

யமுனா ராஜேந்திரன்

### கட்டுரைக்குள் நுழையும் முன்

1984 செப்டம்பர் 7 ஆம் தேதி பாரிஸில் மருத்துவ மனையொன்றில் கான்ஸர் நோயினால் மரணமுற்றார் இல்மஸ் குணே. துருக்கி மக்களைப் பிரிந்த சோகத்துடனேயே, தன் நாட்டுக்குத் திரும்பவும் வெற்றியாளனாகத் திரும்புவோம் என்ற நம்பிக் கையுடனேயே நாடு கடந்து வாழ்ந்த அம்மனிதன் கண்மூடினான்.

மிக அரிதாகவே காணக் கிடைக்கிற அவரின் மிகப்பிரபலமான இறுதிப்படங்கள் மூன்றையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிகச் சிரமப்பட்டே தேடவேண்டிய அவரின் நேர் முகங்கள் சிலவும் சில கட்டுரைகளும் மிகுந்த தேடுதலுக்குப் பின் கிடைத்தன.

அவர் பற்றியோ அவர் எழுத்துக்கள், திரைப்படங்கள் பற்றியோ முழுமையான எந்தப் புத்தகமும் நானறிந்த வரையில் ஆங்கிலமொழியில் இல்லை.

பழைய இதழ்களிலிருந்து கட்டுரைகளும், சில பழைய இதழையும் தந்துதவிய Race and Class பத்திரிகையைச் சேர்ந்த Danny, Frame Work, A World to Win, Third World Guardian போன்ற பத்திரிகைகளுக்கும், London Tooting Ethnic Minority Library ஐச் சேர்ந்த ஒரு கறுப்புப் பெண்ணுக்கும் என் நன்றி என்றும் உரியது.

மார்ச்–ஏப்ரல் 1993 ஆம் ஆண்டு, இரண்டு மாதங்களிலும் லண்டனில் பல்வேறு இடங்களில் குர்திஸ் மக்களின் கலாச்சார விழாவாக "நெருப்பின் திருவிழா" (Festival of Fire) நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சியையொட்டி குர்திஸ் மக்களில் ஒருவரான இல்மஸ் குணேவுக்கு அஞ்சலியாக அவரின் மூன்று திரைப்படங்கள் திரையிடப்பட்டன. (The Herd) ஆட்டிடையன், (Yol) பாதை, (The Wall) மதில் எனும் படங்கள். லண்டனில் புகழ் வாய்ந்த The Institute of Contemporary Arts அரங்கில் இவை காண்பிக்கப்பட்டது. இரண்டு நாட்களில் மூன்று படங்களையும் பார்த்தேன்.

முழுக்கவும் ஐரோப்பியர்களே, பிரெஞ்சு / பிரிட்டிஸ்காரர்களே பார்வையாளர்களாக வந்திருக்க அக்காட்சியின் முதல்நாள் ஒரு குர்திஸ் ஆண் கலந்து கொண்டார். இரண்டாம் நாள் ஒரு குர்திஸ் பெண்ணைப் பார்த்தேன். அதைத் தவிர்த்து கலந்து கொண்ட ஒரே பழுப்பு நிறத்தவன் நான் மட்டுமே.

முதல்நாள், குர்திஸ் ஆண் கேட்டார் "நீங்கள் குர்துவா" "இல்லை" என்றேன். "இது குர்துப்படம்" என்றார். "தெரியும் நண்பரே"என்றேன். சத்யஜித்ரே, மிருனாள் சென் படைத்த இந்தியப் படங்களுக்கு வரும் பிற கறுப்பு, பழுப்பு இனத்தவர்க்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

இவைகளை நான் சொல்லுவது சூழலைப் புரிந்து கொள்ளும் நோக்கம் கருதித்தான். ஐரோப்பிய மதிப்பீடுகளோடு நம் கலாச்சாரங்களை வேடிக்கை பார்ப்பவர்கள் நிறைய வருவதும், நாம் நம் மரபுகளில் சகோதரர்களில் அக்கறையற்றும் இருக்கிற சூழலைச் சுட்டுவதே என் இலக்கு.

நிறவெறி ஐரோப்பியச் சூழலில் இந்தப் புரிதல் மிக மிக முக்கியமானது.

இனி இல்மஸ் குணே பற்றிப் பேசுவோம்.

□ □ □

"குர்திஸ் மக்களைப் போன்றே இல்மஸ் குணே சிறையிலடைபட்டருக்கும் ஒரு துருக்கிய மனிதன். ஒரு மனிதன் சிறைப்பட்டிருக்கும் போது அதை உடைத்துக் கொண்டு வெளிவர அவன் பல்வேறு வழிகளில் முயல்வான்.

ஜன்னல்களை உடைத்துக் கொண்டு, அறை முகட்டை உடைத்துக் கொண்டு, கதவுகளை உடைத்துக் கொண்டு, வெளியேற முயல்வான். ஆகவே இல்மஸ் குணே கம்யூனிஸம் மூலம் முயற்சித்தார்.அவர் முயற்சிப்பார், பிறிதொரு நாளில்

அவர் விடுதலைக்கான சரியான வழியைக் கண்டடைவார். இல்மஸ்ஸை நான் இவ்வாறுதான் கருதுகிறேன். முயற்சிக்கிறார்.

அவரது நிலைப்பாடு சரியானது. ஏனெனில் அவரது நிலைப்பாடு அறிவுபூர்வமானது, நிஜமான உணர்ச்சி சார்ந்தது.

அவரது மக்களையும் அவரைத் தன்னளவிலும் விடுவித்துக் கொள்வதற்கான தேவையினின்றும் எழுந்தது அவரது நிலைப்பாடு."

—கோஸ்டா கார்வஸ்

இல்மஸ் குணேவின் படைப்புலகம் அடிப்படையில் அடக்கு முறைக்கு எதிரான மனிதர்களின் உலகம். இல்மஸ் விரிந்த அளவில் உலகக் கட்டமைப்பையும் அதிகார உறவுகளையும் மாபெரும் சிறைகளாகவே காண்கிறார்.

இல்மஸின் கலாச்சார வாழ்க்கையானது துருக்கி மக்களின், அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் விளைவால் கட்டமைக்கப்பட்ட ஒன்று.

இல்மஸ் குணே துருக்கிய சமூகத்தின் மிகமிக ஒடுக்கப்பட்ட சமூகப்பகுதியான குர்திஸ் மக்களிடையே இருந்து வந்தவர். இவரது பெற்றோர் நிலமற்ற குர்திஸ் விவசாயிகள்.

குர்திஸ் மக்களின் துயரம் பற்றி மிகச் சுருக்கமாகவேனும் நாம் பார்ப்பது இங்கு குணேவின் படைப்புக்கள் பற்றிய புரிதலுக்கு மிகவும் முக்கியம்.

குர்திஸ் மக்கள் ஈரான், ஈராக், துருக்கி, சோவியத் யூனியன் போன்ற எல்லா நிலப்பரப்புக்களிலும் பரந்து வாழ்கிறார்கள். எல்லா நாடுகளிலும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வாழும் அம்மக்கள் தமக்கென்றொரு சொந்த நிலம் வேண்டி போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பிட்ட வெவ்வேறு நாடுகளில் பல்வேறு குழுக்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தாலும், ஐக்கியப்பட்ட ஒரு போராட்டத் தலைமைக்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இச்சூழலில் இருந்துதான் இல்மஸ் குணே துருக்கியையும் உலகத்தையும் தரிசிக்கிறார்.

இல்மஸ் குணே துருக்கி வெகுஜன



Yilmaz Guney

சினிமாவின் வெகுஜன கதாநாயகன். எகிப்து, துருக்கி, இந்தியதமிழ் படங்களின் இயல்புக்கும் வளர்ச்சிக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. உலகச்சினிமா தயாரிப்பில் ஹொலிவூட்டுக்கு அடுத்தது இந்தியா இரண்டாம் இடத்தை வகித்தபோது, துருக்கி நான்காவது இடத்தை வகித்தது.

இல்மஸ் குணேவை அனுபவம் கொள்ளும் போது ஒரு தமிழனாக, வெகுஜன சினிமாவின் மாபெரும் பாதிப்புக்குள்ளான கலாச்சார அரசியலுக்கிடையில் மூச்சு முட்டும் ஒரு இடதுசாரி அரசியல்காரனாக எம்.ஜி.ராமச்சந்திரன் படங்கள் பற்றிய எதிர்மறை சிந்தனை எனக்குத் தோன்றுவது இயல்பே.

இல்மஸ் குணேவின் மரபும், துருக்கிய சினிமாவின் மரபும் நடிகனாக அவர் வளர்ச்சியும் அவர் இறுதியில் வந்தடைந்த உன்னதங்களும் நமது "புரட்சி நடிகர்" எம்.ஜி.ஆரின் மரபார்ந்த வளர்ச்சிக்கு எதிர் திசையிலானது.

இருபத்தி நான்கு ஆண்டுகளாக துருக்கியின் தேசிய சினிமா நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் குணே. இந்த ஆண்டுகள் துருக்கியின் அரசியலோடு இரண்டறக் கலந்தது. இதில் 12 ஆண்டுகளைச் சிறையில் கழித்தார் குணே.

(தொடர்ச்சி 23ம் பக்கத்தில்...)

# சிவரமணியும் தற்கொலையும்

**தூர்க்ஹைமிலிருந்து மாஓ வரை**

## மு.நித்தியானந்தன்

இளங்கவிஞையும் பெண்நிலைவாதியுமான சிவரமணியின் மறைவு துயரந்தோய்ந்தது. அராஜகம் கோரநர்த்தனம் புரியும் ஒரு அந்தகார வெளியில் ஒரு சின்னவிளக்கைப் பிடித்துக்கொண்டு போக முனைந்த அவர், தன்னையே அழித்துக்கொண்டு விட்டமை மனிதாபிமானம் கொண்ட எவரதும் அனுதாபத்தையும் கோருவது.

ஜேர்மனியில் ஒரு இலக்கியச் சந்திப்பில் தமிழ்ப் பெண்நிலைவாதிகள் அவரது கவிதைகளை வாசித்து அவரின் மறைவை நினைவு கூர்ந்தபோது அந்நிகழ்வை அவருடைய தற்கொலையை அவர்கள் ஆராதித்து மகுடம் சூட்ட முனைவதாகவும் அது வெறும் கோழைத்தனம் மட்டுமே என்றும் ஒருவர் வாதிட்டார். ஞானி நிலவைச் சுட்டிக்காட்டினால் மூடன் சுட்டுவிரலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற கூற்றுத்தான் அப்போது என் நினைவில் எழுந்தது.

"சிவரமணி போன்றோரின் தற்கொலை என்பது அடிப்படையில் கோழைத்தனமானது. சிவரமணி வெறும் கவிதைகள் மட்டுமென்ற நிலையிலிருந்ததுடன், தனது அரசியல் பாதையை வகுத்துக்கொள்ளாத நிலையில் இருந்ததும் தற்கொலைக்கான காரணம் எனலாம். கலைகலைக்காக மட்டுமென்ற வாதம் உடையவர்கள் கூட சில பிரச்சனைகளைக் கண்டு அதன் மீதான வெறுப்புடன் தற்கொலையை நாடுகின்றனர். அப்பிரச்சனைகளை மாற்றத் திராணியற்ற இவர்களின் மரணம் கோழைத்தனமானது" என்று இன்னுமொரு காரணமன்னர்களின் No appeal தீர்ப்பு.

ஏன் சிவரமணி எதிர் நீச்சல் போடவில்லை? என்று இன்னுமொரு கண்டனம்.

இந்த நபர்களெல்லாம் கூடிக்கூடிப் போனால் தாங்கள் எதிர்நீச்சல் போட்ட மகத்தான அனுபவத்திலிருந்து சிவரமணிக்கு யாராவது Travel Agency யின் விலாசத்தை சிபார்சு செய்திருக்கக்கூடும். அவ்வளவுதான்!

சிவரமணி என்ற முரசின் மீது தங்கள் மொன்னைக் கத்திகளைச் சுழற்றி மோதி கூச்சல் எழுப்பும் இவர்களின் வாதத்தில் ஒருவருக்கு ஆழ்ந்து கிரகித்துக்கொள்வதற்கு எதுவுமில்லை.

### *கிறிஸ்தவ திருச்சபைகள்*

தற்கொலையை அழுத்தமாகக் கண்டிப்பது மட்டுமே ஒருவரை முற்போக்கானவராக்கி விடாது. மத்தியகால கிறிஸ்தவ திருச்சபைகள் தற்கொலையை மிக மோசமாகக் கண்டனம் செய்திருக்கின்றன. ஒருவர் தன் விருப்பத்தின்படி தன் உயிரை நீக்கிக்கொள்ள முனைவது கடவுளின் ஆதிபத்திய எல்லைக்குள் அத்துமீறி நுழையும் விஷயமாகக் கருதப்பட்டு தற்கொலை செய்தவர்களுக்கு கிறிஸ்தவ மதச்சடங்கே நிராகரிக்கப்பட்டது. இன்னும் ஒரு படி மேலேபோய் தற்கொலை செய்து கொண்டவர்களின் உடல் சந்திகளில் வீசப்பட்டு கழுகுகளாலும் நாய்களாலும் குதறிச் சிதைக்கப்பட்டு நிந்தனைக்கும் அவமரியாதைக்கும் உட்படுத்தப்பட்டது. அந்த சடலங்களைப் புதைக்க அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட யாருக்கும் தெரியாமல் கிறிஸ்தவச் சடங்கு எதுவுமில்லாமல் இரவில் மட்டுமே புதைக்க வேண்டுமென்று கூறப் பட்டிருந்தது. தற்கொலை எத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட அது பாவமான காரியம்தான் என்று புனித. ஆகஸ்தின் நிராகரித்ததிலிருந்து கிறிஸ்த்தவ சமயம் தற்கொலையை கொலைக்குச் சமமான குற்றச் செயலாகவே கருதிச் செயற்பட்டு வந்திருக்கிறது. தற்கொலைக்கு எதிரான சட்டங்கள் 11ம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் நடைமுறைக்கு வந்துவிட்டது. தற்கொலை செய்பவர்களின்

சொத்துகளை பறிமுதல் செய்வதோடு அவர்களுக்கு கிறிஸ்த்தவ சவஅடக்கமும் நிராகரிக்கப்பட்டது. 1882 ம் ஆண்டுவரை இந்த விதிகள் இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்தன.

கிறிஸ்த்தவ திருச்சபையும் அரசும் தற்கொலையைக் கடுமையாகக் கண்டிப்பதை எதிர்த்து வெவ்வேறு கண்ணோட்டத்திலிருந்து அதன் சரிபிழைகள் எதுவாயினும் கியூம், மொந்தேயின், மொந்தெஸ்கியூ, வோல்தயர், ரூஸோ போன்ற அறிஞர்கள் பெருங்குரல் எழுப்பியுள்ளனர்.

ஆக, இந்த இகவாழ்வை இந்துசமயம் நிராகரித்து விடுவதால்–இந்துசமயம் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி..........எல்லாப் பிறப்பும் பிறந்து இளைக்க வேண்டியிருப்பதால்" உயிரின் சொந்தக்காரன் வேண்டுமானால் தான் அதை நினைத்த மாத்திரத்தில் 'தட்டி' விட்டுப் போவது பற்றி சமரசம் செய்துகொண்டு விடுகிறது.

கிறிஸ்தவ சமயத்தைவிட மோசமாக திருக்குர்ஆன் தற்கொலையை கண்டனம் செய்கிறது. கொலையைவிட பாரதூரமான குற்றச் செயலாக தற்கொலையை அது கருதுகிறது.

மத்தியகால கிறிஸ்தவ திருச்சபைக்காரர்களின் அதே குரல்கள் இப்போதும் வெவ்வேறு தளங்களிலிருந்து வெவ்வேறு காரணங்களைக் காட்டிக்கொண்டு தலையெடுப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

□ □ □

## *பிரெஞ்சு அறிஞர் துர்க்ஹைம்*

"நவீன சமூகவியலின் தந்தை எனப்படும் Emile Durkheim – எமில் துர்க்ஹைம் என்ற பிரெஞ்சு சமூகவியலறிஞர் நூறு ஆண்டுகளுக்கு முன் "தற்கொலை"பற்றி நடத்திய சமூகவியலாய்வு இன்றும் அத்துறையில் மகத்தான நூலாகவே கணிக்கப்படுகிறது.

துர்க்ஹைம் தற்கொலையை தனிநபர் ஒருவரின் செயல்பாடாக, தனிநபரின் உளவியல், அவரின் மனக்கிளர்ச்சிகள் சார்ந்த தனித்துவ மனோபாவம் அவரின் விஷேடகுணாம்சம், இளைமைக்கால நிகழ்வுகள், அவரது Private



history ஆகியவற்றால் மட்டுமே விளக்கிவிட முடியுமென்று கருதவில்லை. அதீத தனிநபர் நடவடிக்கையாக மட்டுமே சாதாரணமாகக் கருதப்படும் தற்கொலைக்கு சமூகவியல் விளக்கம் காண முனைந்ததில்தான் துர்க்ஹைமின் ஆராய்ச்சி நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட புறக்கணிக்கப்பட முடியாத ஆராய்ச்சியாக நின்று பிடிக்க முடிந்திருக்கிறது. தற்கொலை நிகழ்ச்சியில் சமூகக் காரணிகளை முதன்முதலாக நிலை நிறுத்தியவர் துர்க்ஹைம் ஆவார்.

வெறும் தனிநபர்கள்தான் தற்கொலை செய்துகொள்கிறார்கள் எனின் ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு குறிக்கப்பட்ட தற்கொலை வீதம் ஏன் காணப்படுகிறது? என்று துர்க்ஹைம் கேள்வி எழுப்பினர். பல்வேறு நாடுகளின் தற்கொலை வீதம் பற்றிய புள்ளி விபரங்களைத் திரட்டி விரிந்த ஆய்வை மேற்கொண்டார். இந்தப் புள்ளி விபரங்கள் காட்டும் தற்கொலை வீதங்களை சமூக அமைப்பியல் சக்திகளின் ஏற்றத்தாழ்வான–அசமத்துவமான செயற்பாடுகளின் விளைவாக விளக்கப்படவேண்டிய சமூக உண்மைகளாக அவர் கண்டார். தற்கொலை வீதமானது ஒரு மெய்யான ஒழுங்கு முறை காட்டுவதும் திட்டவட்டமானதும் என்று அவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு சமூகமும் திட்டவட்டமான தற்கொலைக் 'கோட்டாக்களைக்' கொண்டுள்ளது என்றும் இது சமூகவியலின் விஷேச ஆய்வுக்குரியதென்றும் அவர் கருதினார்.

பல்வேறு நாடுகளினதும், ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயும் கூட பல்வேறு வகை சார்ந்த

மக்களதும் ஒப்பீட்டு ரீதியான புள்ளி விபரங்கள தற்கொலை வீதங்கள் சார்பு ரீதியில் நிலையானவையாக உள்ளன என்றும், எனவே தற்கொலையை நோக்கிய ஒரு கூட்டு மனப்பாங்கு (collective tendency to suicide) ஒவ்வொரு சமூகத்திலும் நிலவுவது என்பது ஒரு சமூக உண்மை என்றும் அவர் நிறுவினார். இத்தகைய கூட்டு மனப்பாங்குகள் சில பொதுக்காரணிகளின் அடிப்படையில் பொதுவாக வகைப்படுத்தக் கூடிய தற்கொலைகளோடு தொடர்பு படுத்தக் கூடியது என்றும் அவர் கருதினார். கூடிய பட்ச தனிநபர்வாதப் போக்கைத் தூண்டுகிற மைய விலகு விசைகளுக்கும் (centrifugal forces) கூடியபட்ச சமூகத்தின் இறுக்கமான-கடுப்பிடியான அமுக்கங்களைக் கொண்ட மைய நாட்ட விசைகளுக்கும் (centripetal forces) இடையிலான சமத்துவமின்மைகள் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் துர்க்ஹைம் தற்கொலைக்கு சமூகவியல் விளக்கம் கண்டார்.

இரண்டு சோடி சமத்துவமின்மை கொண்ட சக்திகளை அவர் வரையறுத்தார். ஒரு சோடி சக்திகள் ஒரு சமூகக் குழுவிற்குள் எந்த அளவிற்கு சமூக ஊடாட்டத்தையும் ஒருங்கிசைவையும் (degree of integration or interaction in a group) கொண்டுள்ளன என்பதனைப் பொறுத்து சுயமுனைப்புத் தற்கொலைகளும் பொதுமை சார் தற்கொலைகளும் இடம் பெறுகின்றன என்றார். மற்றுமொரு சோடி சக்திகள் எந்த அளவிற்கு அறவியல் நடத்தைகளை ஒழுங்குபடுத்துகின்றன என்பதைப்பொறுத்து ஒழுங்கு பிறழ்ந்தநிலைத் தற்கொலைகளும் விதிமுனைவாதத் தற்கொலை களும் அமைவதாக துர்க்ஹைம் கருதினார்.

| | |
|---|---|
| சுயமுனைப்பு | (-)(Egoism) |
| ஒழுங்கு பிறழ்ந்த நிலை | (-)(Anomie) |
| விதிமுனைவாதம் | (+)(Fatalism) |
| பொதுமை சார்பு | (+)(Altruism) |

சமூக ஒருங்கிணைவு (social integration) எந்த அளவு காணப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் ஒரு சமூகக்குழு அதன் உறுப்பினர்களால் ஆதரிக்கப்படுவதும், அதுபோலவே தனிநபர் நடத்தையை நெறிப்படுத்தும் ஆற்றலும் அமைகிறது. சமூக ஒருங்கிணைவு சமூக உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் அதேவேளையில் அவர்கள்மீது அழுத்தங்களையும் பிரயோகிக்கிறது.

சமூக ஒருங்கிணைவு வலிமையானதாக இருக்கும் போது தனிநபர்வாதப் போக்கு நசிந்துபோய் அல்லது அமுக்கப்பட்டு சமூகக்குழுவின் பொதுக் குறிக்கோள்களுக்காக தனிநபர் தன்னையே அழித்து அர்ப்பணிக்கத் தயாராகிவிடுகிறார் என்று துர்க்ஹைம் கருதினார். சமூகக் குழுவினால் பூரணமாக உள்வாங்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தனிநபர் தன்மை (individuality) பற்றிய குறைந்த-வளர்ச்சியுறாத மதிப்பீட்டு நிலையில் அவர் செயற்படுகிறார். சமூகக்குழுவின் நலன் கருதி அது தற்கொலையேயாயினும் தன்னை அர்ப்பணிக்கக் கோரும் அழுத்தத்தினை அவர் எளிதில் நிராகரித்துக் கொள்ள முடிவதில்லை. நவீன ராணுவத்திலும் புராதன சமூகக் குழுக்களின் மத்தியிலும் நிலவும் பொதுமைசார் தற்கொலைகளின் ஒருமித்த தன்மையினை துர்க்ஹைம் தன் நூலில் எடுத்துக் காட்டுகிறார்.

முதுமை காரணமாகவோ, நோய்வாய்ப் பட்டோ படுக்கையில் கிடந்து மரணித்தல் கௌரவக்குறைவு என்று கருதி அந்த அவமரியாதையை தவிர்த்துக் கொள்வதற்காக தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டுவிட்ட டேனிஷ் போர் வீரர்களைத் துர்க்ஹைம் தன் நூலில் மேற்கோள் காட்டுகிறார். இயற்கையாக மரணிப்பவர்கள் விஷப்பாம்புகள் நிறைந்த நரகக்குழிக்குள் என்றென்றும் கிடந்து உழலுமாறு விதிக்கப்பட்டிருப்பதாக Goths இனத்தவர்கள் நம்பினர்.

### *வானத்துப் புதுமையல்ல*

இத்தகைய தற்கொலைகள் ஒன்றும் வானத்துப் புதுமையல்ல. எதிரிகளின் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக தற்கொலை நாடியவர்கள் பற்றி பைபிள் பேசுகிறது.

"அவனோ ஆண்டவர் பெயரைச் சொல்லி, என் ஆண்டவராகிய கடவுளே! என்னை நினைவு கூரும். இதோ என் இரு கண்களைப் பிடுங்கியவர்களையும் என் எதிரிகளையும் பழிவாங்கும்படி இந்த ஒரு முறை மட்டும் முன்பிருந்த வலிமையை எனக்கு தாரும் என்று வேண்டினான். பின் அவ்வீட்டைத் தாங்கிய இரு தூண்களை வலக்கையாலும் இடக்கையாலும் பிடித்துக்கொண்டு பிலிஸ்தியரோடு நானும் சாகக்கடவேன் என்று கூறி தூண்களை வன்மையுடன் அசைக்கவே வீடு

இடிந்து மக்கள் தலைவர்கள், மேலும் அங்கு இருந்த மற்றவர்கள் மேலும் விழுந்தது."- நீதிபதியாகமம்: 16 ம் அத்தியாயம் 28-30

"அப்பொழுது சாவுல் தன் பரிசேயனை நோக்கி, 'அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் ஒருவேளை என்னை அவமானப்படுத்திக் கொல்லாதபடி நீயே உன் வாளை உருவி என்னை வெட்டிப்போடு' என்றார். அச்ச மிகுதியால் பரிசேயர் அதற்கு இணங்கவில்லை. ஆகையால் சாவுல் தன் வாளை தரையில் குத்தி வைத்து தாமாகவே அதன் மேல் விழுந்தார்."- முதலாம் சாமுவேல் ஆகமம்: 31 ம் அத்தியாயம் 4-6

சாம்சனும் சாவுல் மன்னனும் எதிரிகளால் தாங்கள் கைப்பற்றப்பட்டால் சித்திரவதைக் குள்ளாக்கப்படவோ அல்லது கொலைசெய்யப்படவோ கூடுமென்று கருதி தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகளை மேலே குறித்த வேதாகம வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதிரிகளின் கைகளில் பிடிபட்டு சித்திரவதையுற்று இரகசியங்களை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலைகளை தவிர்த்துக் கொள்வ தற்காக தங்களையே அழித்துக் கொள்பவர்களையும் எதிரணி ராணுவ முகாம்களைத் தகர்க்க தற்கொலைப் படைபோல செயற்பட்டு தங்களை அழித்துக் கொள்பவர்களையும் கோழைத் தனத்தால் செயற்படுபவர்கள் என்று கூறுவது அறிவுபூர்வமானதாகாது.

சமூக அநீதிகளுக்கு எதிரான கண்டனங்களைத் தெரிவிக்கின்ற மார்க்கமாகவும் சில சந்தர்ப்பங்களில் தற்கொலைகள் அமைந்திருக்கின்றது.

தென்கொரிய அரசின் கொடூரமான தொழிலாளர் வர்க்க அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராயும் ஆகக்குறைந்த சம்பளம், தாங்கமுடியாத கஷ்டமான வேலைநிலைமைகள் ஆகியவற்றினை எதிர்த்து தாய்-சுன் என்ற ஆடைத்தொழிலாளி தன்னையே தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டமை 1970ல் தென்கொரிய அரசுக்கெதிரான தொழிலாளர் வர்க்க சக்திகள் அனைத்தையும் ஒன்றுதிரட்ட உதவியதில் தென்கொரிய அரசியல் எழுச்சி வரலாற்றில் மிகமுக்கிய நிகழ்ச்சியாகவே அமைந்தது.

தற்கொலை = கோழைத்தனம் என்ற குருட்டுத்தனமான சமன்பாட்டிற்கு அறிவார்த்த சர்ச்சையில் எந்தவித இடமுமில்லை.

## வாழ்வா? சாவா?

தற்கொலை பற்றிய ஆய்வுகள் வெகுவாக முன்னேறியுள்ள போதிலும் இது குறித்த முடிவுகளை மேற்கொள்ளும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதே உசிதமானது. 1918ல் வியன்னாவில் நடைபெற்ற தற்கொலை பற்றிய உளவியல் ஆய்வு அரங்கில் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு கூறிய கருத்துக்கள் இன்றும் பொருந்துவனவாகும்: "இந்தக் கலந்துரையாடலில் எத்துணை பெறுமதிமிக்க தகவல்களும் தரவுகளும் பெறப்பட்ட போதிலும் நாம் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வருவதில் வெற்றி பெறவில்லையென்றே கூறவேண்டும். நமது அனுபவங்களிலிருந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் நாள் வரும் வரையில் இது குறித்து ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றே கருதுகிறேன்."

தற்கொலை பற்றிய நுணுகிய உளவியல் ஆய்வை மேற்கொண்ட Zilboorg என்ற அறிஞர், "விஞ்ஞானபூர்வமான அணுகு முறையிலிருந்து தற்கொலைப் பிரச்சினை இன்னும் தீர்வு கண்டு முடிவு காணப்படாத பிரச்சினையாகவே உள்ளது என்பது மிகவும் தெளிவானதாகும். பொது உணர்ச்சியோ, Clinical Psycho Pathology யோ கூட காரணபூர்வமான அல்லது திட்டவட்டமான பரிசோதனை அனுமானங்களைக் கூட முன்வைக்க முடியவில்லை" என்றார்.

நவீன அறிவியலாளர்கள் பெரும்பாலான தற்கொலை நடவடிக்கைகளில் வாழ்வைப் பேணுகின்ற அல்லது உயிர்வாழ்வைத் தக்கவைத்துக் கொள்ளுகின்ற மனப்பாங்கிற்கும் சுய அழிவைக் கோரும் போக்கிற்கும் இடையிலான உக்கிரமான மோதலின் பிரதிபலிப்பைக் காணமுடியும் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். உண்மையில் தற்கொலை புரிபவர்கள் ஒன்றில் சாவையோ அல்லது வாழ்வையோ தான் விரும்புகிறார்கள் என்று கறாராகக் கூறிவிடுவதற்கில்லை. ஒரே நேரத்தில் அந்த இரண்டு செயற்பாடுகளையும் மேற்கொள்ள முனைகிறார்கள் சாதாரணமாக ஒன்றை மற்றதைவிட கூடுதலாக செய்துகொண்டு விடுகிறார்கள். இந்த எதிர்ப்

போக்குகளில் ஒன்றைக் காட்டிலும் மற்றையது எவ்வளவு தூரம் வலிமை கொண்டதாக அமைகிறது என்பதைப் பொறுத்துத் தான் தற்கொலை நடவடிக்கைகளின் இறுதி முடிவுகள் அமைந்து விடுகின்றன என்ற கருத்து அண்மையில் முன் வைக்கப்பட்டுள்ளது.

## *ஜப்பானியத் தற்கொலைகள்*

ஜப்பானைப் பொறுத்தவரையில் ஜப்பானியரின் தற்கொலை நிகழ்ச்சிகள் வேறுபட்ட விளக்கங்களை வேண்டிநிற்கிறது.ஒருவிதமான விளக்கத்தின்படி ஜப்பானியர்கள் கற்பனாலய வாழ்வில் ஊறிப்போனவர்கள். புரட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும் கூட மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் உயர்ந்த தர்க்க பூர்வமான அறிவு கொண்டவர்களாக காணப்படும் நேரத்தில் ஜப்பானிலோ அவர்கள் மிகுந்த கற்பனா வாதிகளாக இருக்கிறார்கள். புரட்சிகர இயக்கங்களில் ஈடுபட்ட ஜப்பானிய மாணவர் தலைவர்களின் இயல்புகளைப் பற்றி அறிஞர் Faur குறிப்பிடுவதை ஜப்பானிய தற்கொலைகள் பற்றிய ஆராய்ச்சி அறிஞர் பேராசிரியர் Mamouru Iga தன்னுடைய, ' The thorn in the chrysanthemum - Suicide and Economic success in Modern Japan ' என்ற நூலில் மேற்கோள் காட்டுகிறார்:

"எதற்கும் அப்படியே விட்டுக்கொடுத்துக் கொண்டு போகும் போக்கிலிருந்தும் அதிகாரத்துவத்தின் முன்னால் தங்களை அப்படியே மறுதலித்து நிற்கும் நிலைமையிலிருந்தும் மக்களை மீட்டெடுக்கும் இளம் கற்பனாவாதிகளாகவே இந்த மாணவ தலைவர்கள் காணப்படுகின்றார்கள். தங்களது சொந்த சாதனைகளில் இவர்கள் கேள்விக்கிடமில்லாத நம்பிக்கை கொண்டுள்ளனர். கற்பனாவாதப் புரட்சிகர அரசியலுக்கும், தீர்க்கமான எதிர்த்தாக்குதல் நடத்தும் சாகசத் தன்மையோடு கூடிய பக்கூனிய சுயஅழிப்பு போக்கிற்குமிடையில் இவர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தனர்."

1972 மே 20 ம் திகதி தெல்அவிவில் Lod விமான நிலையத்தின் மீது திடீர்த் தாக்குதலைக் கொண்ட ஜப்பானிய பல்கலைக்கழக மாணவன் கோஸோ ஒக்கமோட்டோ மட்டும் கைது செய்யப்பட அவரது இரண்டு புரட்சிகர நண்பர்களும் கிரனைட்ஸ் மூலம் தங்களையே அழித்துக்கொண்டு விட்டனர். கைதுசெய்யப்பட்ட ஒக்கமோட்டோ தனது நினைவுக் குறிப்பில் எழுதுகிறார்: "ஓர் உன்னத இலட்சியம் கருதி சாவிற்காகப் பயப்படாமல் செயற்படுவதென்பது ஜப்பானிய இனத்தில் ஊறிப்போன பண்பு."

Heizo Toriyama என்ற ஆய்வாளர் "ஏன் சாவு அஞ்சப்படுகிறது?" என்று ஜப்பானிய, ஜேர்மனிய, ஆஸ்திரிய மாணவர்கள் மத்தியில் அபிப்பிராயக் கணிப்பீட்டை மேற்கொண்டபோது சாவுக்குப் பிறகு எனது உடலுக்கு என்ன ஆகும் என்ற பயத்தை வரிசைப்படுத்தும் போது ஜப்பானிய மாணவர்கள் அதற்கு மிகக் குறைந்த இடத்தையே கொடுத்திருந்தார்கள் என்பதை விபரிக்கிறார்.

மரணத்தை இயல்பாக ஏற்றுக்கொள்கிற போக்கு ஜப்பானிய சமூகத்தில் மரணம் பற்றிய பல்வேறு கருத்தோட்டங்களால் தான் பலி தமாகியிருக்கிறது. பதினெட்டு வயதே நிறைந்த ஒரு ஜப்பானிய மாணவன் தனது தற்கொலை பற்றி எழுதிவிட்டுப் போன ஒரு குறிப்பிலிருந்து மரணம் பற்றிய ஒரு தேடலில் அவர் ஆழ்ந்து போய் இருப்பதை நாம் காணமுடியும். அந்தக் கடிதம் வருமாறு: "நான் நீண்டகாலம் வாழத்தான் விரும்பினேன். ஆனால் நான் ஏன் வாழவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. ஹைஸ்கூலில் படித்த மூன்று ஆண்டுகளிலும் நான் இதற்கு பதில் தேடிப்பார்த்தேன். ஒரு சாமானிய வாழ்க்கை வாழ்வதென்பது மிகவும் இலேசானதுதான். ......ஒரு பூனையைப் போலவோ, ஒரு பூச்சியைப் போலவோ வாழவும் முடியும்தான். துரதிஷ்டவசமாக மனிதனாகப் பிறந்துவிட்ட காரணத்தால் நான் மிகுந்த துயரத்துடன் இந்த உலகைவிட்டு போகிறேன்.

சொர்க்கத்தில் நான் சோக்கிரட்டீசைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கேட்பேன். வாழ்க்கையின் தத்துவம் தான் என்ன என்று Bergson ஐயும் Kierkegaard ஐயும் கேட்பேன். Schopenhauer ஐயும் Kant ஐயும் சந்திப்பேன். மிசாவோ பியூசி மாறாவுடன் சம்பாசிப்பேன். மனிதவாழ்க்கை என்ன என்று வினவாமல் நீங்கள் வாழ்தல் கூடும். ஆனால் அதற்காக நீங்கள் சாகவும் செய்யலாம். நிம்மதியாக நான் சொர்க்கத்துக்குப் போய் சேர்கிறேன். அங்கே எனது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவேன். அங்கே என் அப்பாவுடன் சேர்ந்து சிகரட் குடிப்பேன்." இத்தகைய மரணம் பற்றிய அதீத தத்துவ விசாரணைப்

போக்கு ஜப்பானிய இளைஞர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கிறது. ஏக தேசமாக—காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பால் தற்கொலையை கோழைத்தனமானது என்று நிராகரிப்பது வெறும் பாமர அபிப்பிராய உதிர்த்தல் என்ற அந்தஸ்தைப் பெறக்கூட லாயக்கற்றது.

□ □ □

## *தற்கொலை பற்றி மாஓ*

Chao - சாஓ என்ற சீனத்துப் புரட்சிகர இளம்பெண் தங்கள் பெற்றோர் பேசிய திருமணத்திற்கு உடன்படாமல் 1919 நவம்பர் மாதம் தனக்கு குறிக்கப்பட்டிருந்த திருமணத்தினத்தன்று தற்கொலை செய்து கொண்டுவிட்ட சம்பவம் தலைவர் மாஓவின் நெஞ்சை உலுக்கியிருக்கிறது. மார்க்ஸியப் பேராசான் மாஓவின் ஆரம்பகால அரசியல் எழுத்துக்களில் சாஓவின் தற்கொலை முக்கிய இடத்தை வகிக்கிறது. அந்த ஆண்டின் சாங்ஷா நகரின் மிகப் பிரசித்தமான துயரக்கதையாக அமைந்து விட்ட சாஓவின் துர்ப்பாக்கிய மரணம் குறித்து மாஓ உணர்ச்சிகரமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

சாஓ என்ற இளம்பெண்ணின் தற்கொலை பற்றி தலைவர் மாஓ பின்வருமாறு எழுதினார்: "ஒரு நபரின் தற்கொலை நிகழ்ச்சியை சந்தர்ப்ப சூழ்நிலைகளே முழுமையாக நிர்ணயிக்கின்றன. சாஓவின் உண்மையான நோக்கம் சாவைத் தழுவுவதுதானா? இல்லை. மாறாக அவர் வாழ்வையே நாடினார். ஆனால் அதற்குப் பதிலாக சாஓ சாவை தழுவிக்கொண்டிருக்கிறார் என்றால், சூழ்நிலைகள் அவரை அவ்வாறு செய்ய நிர்ப்பந்தித்தன என்பதே காரணமாகும். சாஓவினை நிர்ப்பந்தித்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் பின்வருவனவாகும்.

1. சீனசமூகம்.
2. சாங்ஷா நகரில் நன்யாங் தெருவில் வாழ்ந்த சாஓவின் குடும்பம்.
3. சாஓ உடன்பட விரும்பாத—அவருக்கு கணவராக வரிக்கப்பட்ட சாங்ஷா நகரின் கன்சுயான் தெருவில் வாழ்ந்த வூவின் குடும்பம்.

இந்த மூன்று காரணிகளும் ஒரு முக்கோணக் கூண்டுபோல மூன்று இரும்பு வலைகளாக அமைந்துள்ளன. இந்த மூன்று வலைப் பின்னல்களில் சிக்கிக்கொண்டபிறகு, சாத்தியமான வழிகளிலெல்லாம் அவர் வாழ்க்கைக்காக போராடியது, வியர்த்தத்திலேயே முடிந்துவிட்டது. அவர் தொடர்ந்தும் வாழ்வதற்கு அவருக்கு ஒரு வழியும் தெரியவில்லை. வாழ்வின் மறுதலை மரணம். சாஓ மரணிக்க நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்டார். இந்த மூன்று காரணிகளில் ஏதாவது ஒன்று இரும்பு வலையாக இல்லாது போயிருந்தால் அல்லது ஏதாவது ஒரு வலையாகிலும் திறந்து விடப்பட்டிருந்தால் சாஓ ஒருநாளும் மரணித் திருக்கமாட்டார்..........

நேற்றைய நிகழ்ச்சி முக்கியம் வாய்ந்தது. பேசிச் செய்கிற கல்யாணம் என்கிற வெட்கக்கேடான அமைப்பினாலும், எமது சமூக அமைப்பின் இருண்ட அமைப்பினாலும், தனிநபரது விருப்பு வெறுப்புக்களை மறுதலிக்கும் தன்மையினாலும், ஒருவர் தனது துணையைத் தானே தேடிக்கொள்கிற சுதந்திரமின்மையாலுமே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்த நிகழ்வின் சகல அம்சங்களின் மீதும் இது குறித்து அக்கறை கொண்டவர்கள் தங்கள் விமர்சனங்களை முன்வைப்பதுடன் தனது சொந்தக் காதலை தானே தீர்மானிக்கும் சுதந்திரத்திற்காக ஒரு தியாகியின் மரணத்தை வரித்துக்கொண்ட இப்பெண்ணின் பெருமையைப் பாதுகாத்து நிலைநிறுத்தவும் முன்வருதல் வேண்டும்........

தற்கொலை பற்றிய எனது கருத்து அதனை நிராகரிப்பதாகும். முதலில் மனிதனின் குறிக்கோள் வாழ்க்கையைத் தேடுதலாகும். இந்த இயற்கையான போக்கிற்கு எதிராகச் சென்று மரணத்தைத் தழுவிக் கொள்ளக் கூடாது. இரண்டாவதாக சமூகம் மக்களுக்கு எந்த நம்பிக்கையையும் வழங்காத ஒரு உண்மை நிலையிலிருந்துதான் தற்கொலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. எனினும் நாம் இழந்துபோன நம்பிக்கைகளை மீட்பதற்காக சமூகத்துக்கு எதிராகப் போராடியேயாக வேண்டும். நாம் ஒரு போராட்டத்திலேயே மரணிக்க வேண்டும். மூன்றாவதாக தங்களது சொந்த வாழ்க்கைக்கு தாங்களே துணிச்சலோடு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டு விட்டவர்கள் மீது மக்கள் மரியாதை செலுத்துகிறார்கள் என்றால், அது ஒருநாளும் அவர்கள் தற்கொலையைக் கௌரவிக்கிறார்கள் என்று ஆகமாட்டாது. மாறாக தற்கொலை செய்துகொள்ள ஒருவரைத் தூண்டிய, காட்டுமிராண்டித்தனமான அதிகாரத்துவத்திற்கு

எதிர்ப்புணர்வைக் காட்டும்' துணிச்சலான அவரின் ஆத்மபலத்தைக் கௌரவிக்கிறார்கள் என்றே அர்த்தமாகும்.

தனது சொந்த உயிரைத்தானே எடுத்துக் கொள்வதைவிட ஒரு போராட்டத்தில் கொல்லப்படுவது எவ்வளவோ உயர்ந்ததுதான். போராட்டத்தின் குறிக்கோள் 'மற்றவர்களால் கொல்லப்படுவது' அல்ல. மாறாக 'உண்மையான ஆளுமையை நிலைநிறுத்த அவாவுதலே'யாகும். ஒரு நபர் தனது சகல முயற்சிகளாலும் இதனை அடைய முடியாது போவாரானால், சாவுடன் போராடி தன்னையே தியாகத்துக்கு அர்ப்பணிப்பாரெனில் அத்தகைய நபர் இந்த மண்ணில் வாழும் யாரைக் காட்டிலும் வீரம் மிகுந்தவராகவே ( most courageous of all on earth ) திகழ்கிறார். அத்தகைய நபரின் துயரமுடிவு மக்கள் மனதில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லது."

மாஓவின் இந்த வாசகங்களுக்கு விளக்கம் தேவையில்லை. மாஓ போன்ற மகத்தான புரட்சிகர மனிதாபிமானி சாஓவின் தற்கொலையை மிகுந்த அனுதாபத்தோடு நோக்கி தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் மனுக்குலத்தை நேசிக்கும் எவரது சிந்தனையிலும் ஆழ்ந்த பிவுணர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும். மாஓ தற்கொலையை முதலில் நிராகரித்துவிட்டு பிறகு அவ்வாறு தற்கொலை செய்துகொண்டுவிட்ட நபர் இந்த மண்ணில் வாழும் யாரைக்காட்டிலும் வீரம் மிகுந்தவர் என்று கூறுகின்றாரே, இது இரட்டைத் தன்மையை வெளிப்படுத்தவில்லையா? என்று வாதாடுதல் சாலுமா? தற்கொலையை நிராகரித்தால் மட்டும் போதாது, அதை கோழைத்தனமானது என்றும் நிராகரிக்க வேண்டும் என்று அறிவிலிகளின் மூடத்தனம் மட்டுமே கோரமுடியும்.

## *சாஓவும் சிவரமணியும்*

சாஓ 74 ஆண்டுகளுக்கு முன் சீன மண்ணில் சந்திக்க நேர்ந்த அதே கொடூரமான சமூக அமைப்பு முறையையே சிவரமணியும் யாழ்ப்பாண மண்ணில் சந்திக்க நேர்ந்த கொடுமை துர்ப்பாக்கியமானதுதான். யாழ்ப்பாணத்தில் கோலோச்சும் அராஜகச்சூழலுக்கு எதிராக, "ஒரு துண்டுப்பிரசுரத்தைப் போல நம்பிக்கை தரக்கூடிய வார்த்தைகள் எதுவும் என்னிடம் இல்லை" என்ற தனது பிரசித்தமான கவிதை வரிகளில் தனது எதிர்ப்புணர்வை அந்தச்சூழலில் வெளிப்படுத்திய சிவரமணி யாரைக் காட்டிலும் மிகுந்த வீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று கொள்வதே பொருந்தும். அன்னிய மண்ணில் அல்ல, அகதிச் சூழலில் அல்ல, சொந்த மண்ணில் சோரம் போய்விட்ட விடுதலைப் போராட்டத்தின் சூழலில், "எவ்வளவோ காட்சிகள் விரிந்து கிடந்தனதான். ஆனால் அவை எல்லாமே இருண்டுபோன காட்சிகள்" என்று ராஜினி திரணகம வர்ணித்த ஒரு சூழலில், ஒரு பெண்ணின் மீதான இரட்டை ஒடுக்குமுறை மேலாண்மை புரியும் ஒரு சூழலில் தன்னை மாய்த்துக் கொள்வதன் மூலமே தனது சமூகக் கண்டனத்தை வெளியிட முனைந்த சிவரமணி ஒரு மகத்தான தியாகியின் இடத்தை வகிக்கிறார்.

அவர் கவிதை எழுதியதை ஒரு பாவமே போன்றும் அவர் அரசியல் பாதையை வகுத்துக் கொள்ளவில்லை என்றும் பிரச்சினைகளை மாற்றத் திராணியற்ற கோழை என்றும் போலிகள் நயவஞ்சகக் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

மக்கள்சீனத்தின் மகத்தான கலாச்சாரப் புரட்சியைத் தலைமை ஏற்று நடத்திய மாபெரும் புரட்சிகரத் தலைவியான சியாங் சிங் என்ற தலைவர் மாஓவின் துணைவியார் தனது 77வது வயதில் தற்கொலை செய்து கொண்டு தனது சிறை வாழ்வை முடித்துக்கொண்டுவிட்ட நிகழ்ச்சியின் (1991 மே 14) மீது அவதூறு கூறுபவன் யாரோ?

"ஒரு ஜீவமரணப் பிரச்சினை பற்றி நீங்கள் இவ்வளவு அலட்சியமாக இருக்கலாமா?" என்று ஒரு சந்தர்ப்பத்தில் சியாங் சிங்கிடம் கேட்டபோது அந்தப் புரட்சிப்பெண் பின்வருமாறு கூறினார்:

"I don't care. சாவு என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? நான் சாகவேண்டும் என்று எப்போதோ தீர்மானித்து விட்டேன். இப்போதெல்லாம் நான் தியாகத்தைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

1923 பெப்ரவரி மாதத்தின் போது லெனின் தனது இறுதிக் காலத்தில் தாங்கமுடியாத நோயின் வேதனையால் நஞ்சு கொண்டுவந்து தருமாறு

கேட்டுவிட்டார் என்பதற்காக லெனின் கோழை என்று குறை கூறக்கூடியவர் யார்?

FPL ன் தலைவராக ஒரு தசாப்த காலத்துக்கு மேல் எல்சல்வடோர் யுத்தத்தை வழிநடத்திய கெரில்லாத் தலைவர் கார்ப்பியோ 1983 ஏப்பிரலில் 12 ல் தனது நெஞ்சில் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துவிட்டதற்கு கோழைத்தனம் மட்டும் விளக்கம் தந்துவிடாது.

சங்கானை சாதிப்போராட்டத்தில் மட்டக்களப்பிலிருந்து சென்று நேரடியாகக்கலந்து கொண்ட மாஓயிஸ்ட்டான கவிஞர் சுபத்திரன் தற்கொலை செய்து கொண்டு மரணித்து அரசியல் பாதையை வகுத்துக்கொள்ளாதுவிட்ட தவறின்பாற் படுமாமோ?

□ □ □

## தற்கொலையும் தமிழர்களும்

சிவரமணியின் தற்கொலையினை ஒரு தனித்த நிகழ்வாகவும் கருதுவதற்கில்லை. இலங்கையின் தற்கொலையின் பின்னணியில்– அதுவும் குறிப்பாக வடமாகாண தமிழர்களின் தற்கொலை விகிதாசாரத்தின் பின்னணியில் வைத்துப் பரிசீலிப்பது இன்னும் கூடிய விளக்கத்தினை நமக்குக் கொடுக்கத் துணைபுரியும்.

சிங்கள மக்களுடன் ஒப்பிடும் போது வடமாகாண இலங்கைத் தமிழர்கள் மத்தியில் காணப்படும் இந்த ஆகக்கூடிய தற்கொலைவீதம் 'அசாதாரணமான தற்கொலைப் பண்பு' என்றும் இது பெருமளவு கிராமியத் தோற்றப்பாடு என்றும் ஆதர் லுாயிஸ் வூட் கூறுகிறார். கலாச்சார மதிப்பீடுகள் தற்கொலை வீதத்தின் மீது செல்வாக்கைச் செலுத்த

## இலங்கையின் தற்கொலை 1953

### மாகாணங்களும் நகரசபைகளும்

| கடலோரப்பிரதேசங்கள் | தற்கொலைவீதம் | உள்நாட்டுப்பிரதேசம் | தற்கொலைவீதம் |
|---|---|---|---|
| கொழும்பு | 7.8 | மத்திய மாகாணம் | 6.9 |
| மேல் மாகாணம் | 8.2 | ஊவா மாகாணம் | 6.0 |
| தென் மாகாணம் | 6.4 | வடமத்திய மாகாணம் | 7.0 |
| வடமேல் மாகாணம் | 6.8 | **இலங்கைத்தமிழர்** | |
| சப்ரகமுவா மாகாணம் | 7.7 | வட மாகாணம் | 13.9 |
| கிழக்கு மாகாணம் | 6.9 | இலங்கை சராசரி | 7.7 |

ஆதாரம்: "Crime and Agression in changing Ceylon - A Sociological Analysis of Homicide, Suicide and Economic crime" by Arthur Lewis Wood (1961)

வல்லன என்று வடமாகாணத்தின் இலங்கைத் தமிழர்கள் பற்றிய தரவுகள் வலுவூட்டுவனவாக உள்ளன என்று அவர் கூறுகிறார்.

1950ன் நடுப்பகுதியிலிருந்து 1970ன் நடுப் பகுதி வரையிலான இரண்டு தசாப்த காலத்தில் இலங்கையின் தற்கொலை வீதமானது 3 மடங்காக அதிகரித்திருக்கிறது. 1955ல் 6.9 ஆக இருந்த தற்கொலை வீதம் 1974ல் 22.1 ஆக அதிகரித்திருக்கிறது. இது உலகின் ஆகக்கூடிய தற்கொலை வீதங்களில் ஒன்றாகும். இலங்கையின் தற்கொலையில் அவதானிக்கத்தக்க முக்கிய அம்சம் இளம் ஆண் பெண்கள் மத்தியில் காணப்படும் அதிகரித்த தற்கொலை நிகழ்ச்சிகளாகும். 1960களிலிருந்து இதனை ஆழ்ந்து நோக்கினால் தற்கொலை புரிந்து கொண்டவர்களில் சரி அரைவாசிப் பேர் 15–29 வயதிற்குஇடைப்பட்டவர்களாக இருப்பது தெரியவரும். அதிலும் பெண்கள் மத்தியிலான தற்கொலைகள் ஆண்களின் தற்கொலைகளை விட கூடிய அதிகரிப்பைக் காட்டுகிறது. 1955ல் 59 வீதமாக இருந்த இத்தற்கொலை வீதம் 1974ல் 72 வீதமாக அதிகரித்துள்ளது. அதிலும் மாவட்டரீதியான தற்கொலை வீதங்கள் பற்றிய ஆய்வு நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய பல உண்மைகளைப் பற்றிப் பேசுகிறது.

## தற்கொலைவீதம் – மாவட்டரீதியாக

(ஒரு லட்சத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில்)

| மாவட்டம் | 1960 | 1970 | 1974 |
|---|---|---|---|
| வவுனியா | 21.3 | 59.8 | 78.0 |
| யாழ்ப்பாணம் | 21.3 | 27.0 | 43.3 |
| பொலநறுவை | 31.6 | 24.6 | 43.3 |
| மன்னார் | 5.6 | 24.3 | 42.2 |
| மட்டக்களப்பு | 10.8 | 25.6 | 32.7 |
| குருநாகல் | 12.9 | 25.0 | 32.3 |
| நுவரெலியா | 5.3 | 18.4 | 30.1 |
| பதுளை | 15.1 | 24.9 | 28.0 |
| புத்தளம் | 6.4 | 25.6 | 21.3 |
| மாத்தறை | 8.3 | 7.5 | 14.8 |
| கொழும்பு | 6.7 | 9.5 | 8.9 |
| இலங்கை சராசரி | 9.9 | 19.1 | 22.1 |

ஆதாரம்: "The spiral of Suicide and Social change in Sri Lanka" by Robert N.Kearney and Barbara D.Miller (1986)

1955லிருந்து 1974 காலப்பகுதில் தற்கொலை வீதாசாரத்தில் வவுனியா மாவட்டம் தான் தொடர்ச்சியான–நிலையான அதிகரிப்பைக் காட்டுகிறது. அதற்கு அடுத்து அதிகரிப்பைக் காட்டுவது யாழ்ப்பாண மாவட்டமாகும். ஆகக்கூடிய தற்கொலை வீதத்தைக் காட்டும் முதல் ஐந்து மாவட்டங்களில் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மாவட்டங்களும் அடங்கிவிடுகின்றன. அண்மைக்கால புள்ளி விபரங்களையும் கணக்கிலெடுப்போமாயின் இந்த தற்கொலை வீதம் மிகச்சடுதியான அதிகரிப்பினை காட்டி நிற்கும் எனலாம்.

ஸ்ட்ரௌஸ் & ஸ்ட்ரௌஸ், ஆதர் லூயிஸ் வூட் ஆகிய ஆராய்ச்சியாளர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் நிலவும் மிகவும் இறுக்கமான சாதி மற்றும் இரத்த இன உறவுகள் தனிநபரினது மன அபிலாஷைகளையும் குறிக்கோள்களையும் கட்டுப்படுத்தியும் ஒடுக்கியும் விடுகின்ற போக்கினால் தான் இந்தக் கூடியபட்ச தற்கொலைவீதம் காணப்படுகிறதென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இலங்கைத் தமிழர்களின் கலாச்சாரப் பண்பில் ஆத்திரம் மற்றும் உக்கிர உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு வெளிஉலகில் போதுமான–ஏற்றுக்கொள்ளத்தக்க வடிகால்கள் இல்லாமையால் இது மறுபுறத்தில் தங்கள் சுயத்துக்குள்ளேயே செயற்பட ஆரம்பித்துவிடுகிறது, என்று கூறத்தோன்றுகிறது. எனினும் இலங்கைத்தமிழர்கள் மத்தியிலான இந்தக்கூடிய பட்ச தற்கொலைவீதத்தின் பின்னணியில் செயற்படும் சமூக –கலாச்சார இயக்கவியல் இன்னும் விரிந்த நுணுகிய பரிசீலனைக்குட்படுத்தப் படவேண்டியுள்ளது. "அதிகரித்துச் செல்லும் தற்கொலை வீதத்தின் பின்னணியில் செயற்படும் சமூக மாற்றம், மற்றும் சீர்குலைவுகள் போன்றனவற்றை 100 ஆண்டுகளுக்கு முன் இனம் கண்ட தூர்ஹைமின் பார்வையில் ஆராய்ச்சிக்கு இடம் தருகின்ற ஒரு சமகால case study யாக இலங்கை முக்கியத்துவம் பெறுகிறது" என்று இலங்கையின் தற்கொலை பற்றிய அண்மைக்கால ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது. இந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையுறத் தொடங்கிய 80 களுக்கு முற்பட்ட கால அவதானிப்புகள் என்பதை கவனித்தில் நிறுத்துவது பொருந்தும்.

இந்த விரிந்த புள்ளிவிபரங்களின் பின்னணி சிவரமணியின் மரணத்துக்கு ஆழ்ந்த பரிமாணத்தை சேர்கிறது. சிவரமணியின் மறைவுக்கு **அனுதாபம்** தெரிவிக்கும் அனைவருமே தற்**கொலையை** திட்டவட்டமாக நிராகரிப்பவர்களாவர்.

"எவ்வளவுதான் சர்ச்சைக்குட்படுத்தப் பட்டாலும், யார்தான் எப்படி மறுதலித்தாலும் தற்கொலை என்பது ஒவ்வொரு மனிதனதும் ஆழ்ந்த அனுதாபத்தைக் கோரிநிற்கும் மனிதவாழ்வின் ஒரு நிகழ்வாகும்." என்ற ஜேர்மனிய மகாகவிஞன் Goethe யின் வாசகங்கள் இங்கே நினைவு கூரத்தக்கது.

தற்கொலை செய்துகொண்டுவிட்டதால் மட்டும் எவ்வாறு சிவரமணி கோழையாகி விடமாட்டாரோ அதேபோல போலிகளும் போக்கிரிகளும் 'உயிர் கொண்டு' திரிவதால் மாத்திரமே வீரர்களாகிவிடப் போவதில்லை.

□ □ □

**சி.சிவரமணி,**
**யாழ்ப்பாணம் பெண்கள்**
**ஆய்வு வட்டத்தின் அங்கத்தவராகவும்,**
**யாழ் பல்கலைக் கழக கலைப்பீட**
**மாணவியாகவும் இருந்தார்.**
**யாழ் பெண்கள் ஆய்வு வட்டம்**
**வெளியிட்ட 'சொல்லாத சேதிகள்' என்ற**
**கவிதைத் தொகுப்பின் மூலம்**
**கவித்வமான பெண்நிலைவாதியாகவும்**
**தன்னை அடையாளம் காட்டினார்.**
**இவர் பல சர்வதேச பெண்கள்**
**ஆய்வரங்குகளிலும்**
**கலந்துகொண்டவர்.**
**மக்களின் விடுதலையையும்,**
**ஜனநாயகத்தையும்**
**நேர்மையாக நேசித்தவர்.**
**சிவரமணி,**
**1991 மே 19ம் திகதி**
**தான் எழுதிய கவிதைகளைத்**
**தீயிட்டு எரித்துவிட்டுத்**
**தற்கொலை செய்து கொண்டார்.**

தமிழர் சமூகத்துள் இப்படியும்
நடக்குமா என வினா எழுப்புவோர்
இதனை ஒரு கற்பனைக் கதையாக
எடுத்துக்கொள்ளலாம்.

க.கலாமோகன்

# மெய்

உன்னுடன் பேசுவதற்காக எனக்கு நிறைய உள்ள போதும் இது உனக்காக நான் எழுதும் கடிதமல்ல. உலகம் அசுத்தமானது... ஆம், நாம் வாழுகின்ற உலகுதான்... உனக்கு நான் எழுது பவைகள் கடிதமெனப்படின்- உனது கணவனுக்கு எதிராகச் சதி செய்கின்றேன் எனப் பழிமொழி பகர ஒரு நிமிடத்தைக் கூட விரயம் செய்துவிடாது. எனது கண்ணின் முன் பட்டவை சில வெற்றுத்தாள்கள். இவை மீது நான் உன்னை எழுதுகின்றேன். எழுதுபவைகளை உன்னிடம் காட்டி விடமுடியுமா என்ற சந்தேகங்கள் என்னிடம் நிறையவே உள்ளபோதும் நானோ பயம் துறந்தவன். துறந்தலும், துறக்காதிருந்தலும். றூமில் இன்று எவருமே இல்லை. லைட்டை அணைத்து மெழுகுவர்த்தியை உருகப்பண்ணி ஒளியை உலாவ விடுகின்றேன். பியரை எடுத்து, சில மிடறுகள், பின் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கின்றேன். எழுதுகின்றேன்.இது கடிதமா? இல்லை... உன்னோடு பேசுபவை.

அவநம்பிக்கை கசியும் உனது விழிகளைப் படம் பிடித்திருக்காதுவிடின், உன்னைப் பற்றி நான் சிந்தித்தேயிருக்கமாட்டேன். உனது விழிகளின் கசிவுகள் எனது இரவுகளையும் நனைத்தன. என்னை விழிக்கப் பண்ணின. ஏன்! என் ஆத்மாவும் நனைந்து போயிற்று. உன் நிழல்களினைத் தொடர அதனை அனுப்பினேன். அது, உன் நிழலை எப்பொழுதுமே காவாத்து செய்துகொண்டிருக்க வேண்டுமென்பதுதான் என் அவா.

இந்தக் கணத்தில் எனக்கும் உனக்கு மிடையே ஓர் தூரம். நாம் அருகருகே இல்லை. உனது கணவன் உனக்கருகே இல்லாதிருக்கும் பட்சத்தில் - நீ ஒருவேளை சுதந்திரமாக அழுது கொண்டிருக்கலாம். அல்லது......

மெய்!

□ □ □

***மெய்யின் நிர்வாணம்***
***ஒருவேளை தொடக்க காலமோ!***

"நீங்கள் உங்களது அவருடன் படம் பார்க்க வெளியே போவதுண்டா?" எந்த வித பரபரப்பும் இல்லாமல் நான் அவளிடம் கேட்டுவிட்டேன். "இல்லை" - காட்டாற்றின் ஓட்டத்தை நிலைகுலைய

வைக்கும் சப்தம்... நிசப்தம்...

"ஏன்? படம் பார்க்க விருப்பமில்லையா?"

"அப்படியென்றில்லை. வாடகைக் கசெட்டுகளை அவர் வாங்கி வருவார். வீட்டில்தான் படம் பார்ப்பதுண்டு.

"வீட்டில், வீடியோவில் படம் பார்ப்பதற்கும், வெளியே போய் வெண்திரையில் படம் பார்ப்பதற்குமிடையே வித்தியாசங்கள் உள்ளன. இதில் ஓர் தனிச்சுகம் உண்டு. வெளியே போய்ப் படம் பார்த்தபின் வெளியே வந்தால்... சற்றே பாரிஸ் வீதிகளில் உலாவலாம். எங்காவது மக்டோனால்ட்களில் சென்று எதையாவது லைட்டாகக் கடிக்கலாம், குளிராகக் குடிக்கலாம், சம்பாஷிக்கலாம்... இப்படியே வீட்டிற்குள் அடைபட்டுக் கிடப்பதை வாழ்க்கையென எப்படிச் சொல்லமுடியும்?"

"உண்மைதான் நான் வாழ்வதாக எனக்குப் படவில்லை. ஒவ்வொரு கணங்களும் ஊசிகளாகி என்னைக் குத்துகின்றன. குத்திக் கிழிக்கின்றன."

"ஏன்? அவர் மோசமானவரா?"

"உங்களுக்குத்தான் அவரைத் தெரியுமே!"

"தெரியும். நீங்கள் அவரை எப்படித் தெரிந்து வைத்திருக்கின்றீர்கள் என்பதுதான் தெரியாது"

"அவரின் மீது உங்களுக்கு விருப்பமில்லையா?"

"இரக்கமுண்டு, விருப்பமில்லை"

"ஏன்?"

"இங்கே வரும்வரை எனக்கு அவரைத் தெரியாது. அவரை மணம் முடித்தல் எனக்கு ஓர் கட்டாய மாகவிருந்தது."

"உங்களை அவர் அடிமையாக நடத்துகின்றாரா?"

"அவர் அப்படியில்லை. ஆனால், அவர்மீது எனக்கு வி( ,ப்பமில்லை."

"ஒருவேளை மணம் முடிக்கும்வரை அவரை உங்களுக்குத் தெரியாததையும் மீறி, அவர் உங்களிற்கு அழகற்றவர்போல படுகின்றாரா?"

"அப்படிச் சொல்லமுடியாது. அவர் எனக்கு விருப்பமானவராக இல்லை. ஆனால் அவர் நல்லவர்..."

"அது சரி, அவருக்கு உங்கள் மீது விருப்பமுண்டா?"

"அது எனக்குத் தெரியாது!"

"அப்படியாயின், நீங்கள் இருவரும் ஒரு போதுமே படம் பார்க்க, ஒன்றாக வெளியே செல்லமாட்டீர்கள் எனக் கருதுகின்றேன்."

"ஏன் இப்படித் துருவித்துருவிக் கேள்வி கேட்கிறீர்கள்?"

"உங்களது விழிகளின் பின்னே கட்டியாகக் கிடக்கின்ற சோக ஆறு கசிவதைக் கண்டுவிட்டேன். அதுதான். என்னோடு நீங்கள் படம் பார்க்க வருவதற்கு உங்களுக்கு விருப்பமா?"

"அவரிடம்தான் கேட்டுப்பார்க்கவேண்டும்"

"அவர் 'ஓம்' எனில், நீங்கள் என்னுடன் படம் பார்க்க வருவீர்களா?"

"எதற்கும் முதலில் அவருடன் பேசிப்பாருங்கள்"

"நான் பேசினால், அதை அவர் வித்தியாசமாக நினைக்கமாட்டாரா?"

"அவர் படித்தவர், அதைவிட உங்கள் மீது அவருக்கு நல்ல மதிப்பு வேறு உண்டு."

□ □ □

*மெய்யை நோக்கிய*
*அடுத்த கட்ட நகர்வு.*

ஓர் பிரெஞ்சு உணவகத்தில் நானும் அவரும் தனியாக. அவர்தான் உணவகத்தைத் தெரிவு செய்திருந்தார். சாப்பிடுவதற்கான ஓடர்களைக் கொடுத்தபின்னர்– என்னிடம் ஓர் சிகரெட் கேட்டார். பெரிதாகப் புகைப்பவரென்றில்லை. என்னைச் சந்திக்கும் வேளைகளில் சிறிது புகைப்பார்.

"எப்படித் தொடங்குவதென யோசிக்கின்றேன்" – இது நான்.

"ஏன் யோசிக்கின்றீர்கள்? தொடங்க வேண்டியது தானே?"

"இது உங்களது மனைவி பற்றியது!"

சிறிது கலவரமடைந்தவர் போல மாறிக்கொண்டார்.

"நான் சரஜா பற்றிக் கதைப்பதையிட்டுத் தங்களுக்கு

ஆட்சேபனையிருக்குமாயின் நான் அதனைத் தவிர்த்துக் கொள்கின்றேன்."

"ஆட்சேபனையென்றில்லை. பேசுங்கள்..."

நகர்வு... பாம்பின் சீற்றமா? தெளிநீர் ஓட்டமா? நகர்கின்றது.....

"உங்கள் குடும்ப விஷயத்துள் நான் தலையிடுகின்றேன் என நீங்கள் நினைத்தால் கூட அதில் தப்பில்லை. சரஜாவுக்கும் உங்களுக்குமிடையே ஓர் சந்தோசமான உறவு இல்லையென நான் நினைக்கின்றேன்..."

"நீங்கள் சொல்வது சரி."

"சரஜா மீது உங்களுக்கு விருப்பம் இல்லையா?"

"எனக்கு விருப்பம் உண்டு. அவளுக்கு என் மீது விருப்பம் இல்லையென நான் நினைக்கின்றேன்."

"உங்களிற்கிடையே பாலியல் உறவுகள் என்று..."

"அப்படியொன்றும் இல்லை."

"ஏன்?"

"முதலாவது இரவிலேயே மறுத்துவிட்டாள்!"

"உங்கள் பாலியல் விருப்பத்திற்காக நீங்கள் அவளைப் பலவந்தம் செய்யவில்லையா?"

"அவள் விரும்பாமல்தான் இந்தக் கலியாணமே நடந்தது. மீண்டும், அவள் விரும்பாத ஒன்றைப் பலவந்தத்தினூடாக அடைய நான் விரும்பவில்லை."

"அவள் உங்களை விரும்பவில்லையென்பது முன்பே உங்களுக்குத் தெரியாதா?"

"அப்போது நான் இதனைச் சீரியஸாக எடுக்கவில்லை. அதுதான்..."

"அப்படியாயின் உங்களது பாலியல் திருப்திகள்?..."

"எனக்குச் சில ஆபிரிக்க விபச்சாரிகளுடனும், பிரெஞ்சுப் பெண்களுடனும் நல்ல தொடர்புகள் உள்ளன."

"இது சரஜாவுக்குத் தெரியுமா?"

"தெரியாது என நான் நினைக்கின்றேன்"

"உங்களைப் போல அவளும் வேறு ஆண்களுடன் செல்வதை அனுமதிப்பீர்களா?"

"நான் வேறு பெண்களுடன் போகலாமென விரும்பின், ஏன் அவள் வேறு ஆண்களுடன் போகக்கூடாது?"

"அவள் அப்படிச் செய்வாளா?"

"அது எனக்குத் தெரியாது."

"சரி, நீங்கள் எப்போதாவது சரஜாவுடன் படம் பார்க்க வெளியே சென்றதுண்டா?"

"இல்லை."

"ஏன்?"

"எனக்கு வெளியே போய் படம் பார்ப்பதில் நாட்டம் இல்லை."

"அவள் உங்களிடம் கேட்டதுமில்லையா?"

"இல்லை."

"சரி, நான் அவளுடன் வெளியே படம் பார்க்கச் சென்றால், அதனை அனுமதிப்பீர்களா?"

"என்னிடம் ஏன் கேட்கின்றீர்கள்? அதை அவளிடம் கேட்கலாமே!"

"விசித்திரமானவராக நீங்கள் எனக்குப் படுகின்றீர்கள். உங்கள் இருவருக்குமிடையே நல்ல உறவுகள் இல்லையெனில் விவாகரத்துச் செய்யலாமே!"

"அது பற்றி யோசித்துக் கொண்டுள்ளேன். சரி, அவள் சம்மதித்தால் அவளுடன் எந்தப் படம் பார்க்கச் செல்வீர்கள்?"

"சிலந்திப் பெண்ணின் முத்தம்."

"எனது பிரெஞ்சுச் சிநேகியுடன் இதனை நான் மூன்று வருடங்களின் முன்னர் பார்த்தேன். இரண்டு ஹோமோசெக்ஸுவல்களிற்கிடையே நடக்கும் கதை... நான் ரசித்த படங்களிலொன்று..."

"நீங்கள் விரும்பினால் எங்களுடன் படம் பார்க்க வரலாம்..."

"வேண்டாம். நீங்கள் இருவரும் தனியே செல்வதுதான் நல்லது."

□ □ □

*மெய், மெய், மெய்,*

'சிலந்திப் பெண்ணின் முத்தம்' பார்த்தபின்னர் நானும் சரஜாவும் ஓர் BAR உள் நுழைந்து, ஒதுக்குப்புற இருக்கையில் அமர்கின்றோம்.

"என்ன! என்னை அப்படி உற்றுப் பார்க்கின்றீர்கள்?" –இது அவள்.

"நீங்கள் அழகாகவுள்ளீர்கள். உங்களது அழகை ரசிக்கின்றேன். இது தவறா?"

"அப்படியென்றில்லை. எதற்காக தாடியை இப்படி வளரவிட்டுள்ளீர்கள்?"

"உங்களது கூந்தல்கூட நன்றாக வளர்ந்துதான் உள்ளது. ஏன் என்று கேட்கலாமா?"

"கூந்தல் நீளமாக வளரவிடுவதில் எனக்கு விருப்பமாகவுள்ளது."

"எனது தாடி விஷயமும் அப்படித்தான்."

"நான் உங்களை விரும்புகின்றேன் என்றால் கோவிப்பீர்களா?" – சரஜா என்னை நிமிர்ந்து பார்க்கின்றாள்.

"கோபப்பட என்ன இருக்கின்றது. நானும் உங்களை விரும்புகின்றேன்."

"ஏன் என்னை நீங்கள் விரும்புகின்றீர்கள்?"

"உங்களது முகவெட்டு என்னைக் கவர்ந்துள்ளது. உங்களது விழிகளும் உதடுகளும் என்னுள் கிறக்கத்தையேற்படுத்தின என்பது மட்டுமல்ல, உங்களது சோகம் கசியும் வாழ்வும்தாம்..."

"விழிகளும் உதடுகளும் கிறக்கத்தையூட்டாத, ஆனால் சோகத்தை மட்டுமே என்னைப்போல வாழுகின்ற வேறொரு பெண்ணின் மீது உங்களுக்கு விருப்பம் வராதா?"

"இரக்கம் வரும். ஆனால், இரக்கம் வருகின்ற அனைவரோடும் நாம் வாழ முடியாது. எமது மனதின் தாகங்களை மறுதலித்து எதனைச் செய்தாலும், அது போலியாகவேயிருக்கும்..."

சரஜாவை அணைத்து முத்தமிடுகின்றேன். கூந்தலைத் தழுவினேன். சொக்கித்து நின்றன சில கணங்கள்.

"இந்தக் கணங்கள் போலியானவை என நினைக்கின்றீரா, சரஜா?"

"இல்லை இவை சுத்தமானவை."

☐ ☐ ☐

## *மெய்த்துவம்*

ஹொட்டல் அறைக்குள் நானும் அவளும். கூந்தல், தோள்வழி கொட்டுண்டு, அரை நிர்வாணமாக அவள்... என் முன்... மெய்.

தணலா? அனலா? சாம்பரா? காமாக்கினியிலிருந்து எகிறித்தெறித்து நீண்டுவளரும் அர்த்தங்களுள் அர்த்தங்கள் அழியும் கணங்கள். மெய்களிரண்டும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி... வார்த்தைகளைப் பஸ்பமாக்கி... ஓர் முடிவற்ற வேள்வியில்... உணர்வுகள் பேசிய வார்த்தைகளற்ற முனகல் மொழிகள். உடல்களின் சேர்க்கையில் ஆத்மாக்கள் தோய்ந்தன. நிர்வாணம் பொய்யற்றதாகி, மெய்களைத் துரத்தும் அமைதிப்போரில்...

'இன்னும்' – அவனா? அவளா?

உதடுகள் கடிபட்டு இரத்தம் கசிந்தது. முலைகள் விம்மித் தணிந்தன. சுத்தம். இது சுத்தம். எமது கடைசி மூச்சுகள் ஒரே நேரத்தில் விடப்பட்டன.

"இன்று நான் வாழ்ந்தேன்."

"இனியும் நாம் வாழ்வோம்."

"உங்களுடன் நான் வாழ விரும்புகின்றேன்" – சரஜா.

"என்னிடம் வீடு இல்லை. எட்டுப்பேருடன் ஒரு றூமில் இருக்கின்றேன்."

"அவரிடம் கேட்டால், சிலவேளை நாம் அங்கேயே சில காலங்கள் வாழ அனுமதிப்பார்."

☐ ☐ ☐

வீடு புகுந்து, விஷயத்தைச் சொல்லி, அவரிடம் ஒரு றூம் கேட்டோம்.

"எனக்கு ஆட்சேபனை இல்லை. இங்கே நான்கு றூம்கள் உள்ளன. ஒன்றிலே நீங்கள் வாழலாம்"

"நான் பணம் செலுத்துவேன்."

"பணத்தை விடுங்கள். உங்களிற்கு ஒழுங்காக வேலை இல்லை. வேலை கிடைத்ததும் பணம் பற்றி யோசிப்போம். அதுவரை நீங்கள் இங்கே இருக்கலாம்."

சரஜா என்னைப் பார்த்தாள்.

அவள் காட்டிய அறைக்குள் நான் உள்ளிட்டேன்.

☐ ☐ ☐

# காக்கை நாய்ச் சவாரி

ஒவ்வொரு காகமும் இப்படி மாறவேண்டும்.
ஒவ்வொரு நாயும் இப்படி உதவவேண்டும்.

தான் கடிக்கும் எலும்பை தனது தோழனுக்கு கொடுக்கவேண்டும்
நாய்.
தான் கொத்தும் பிணத்தை தனது நண்பனுக்கு கொடுக்கவேண்டும்
காகம்.

அருமை!
அற்புதம்!
அழகு!
ஒரு நாயின் தோளில் ஒரு காகம் பயணம்!

இந்த மனிதன் வெட்கப்படவேண்டும்.
'மனிதம்' இவைகளிடம் இருக்கிறது!
பொருந்தமுடியாத இரு ஜீவராசிகள்
பொருந்திக்கொண்ட வியப்பில்,
சேவலுடன் கூடிவிட்டு குளிக்கமுடியாமல் நீரின்றி இருந்த குருவி
ஆனந்தக் கண்ணீர் விட்டே
அதனை அது நீராட்டிக்கொள்கிறது.

இன்னும் நாய் போகிறது,
அதன் தோளில்
இன்னும் காகம் இருக்கிறது.

இது உலக சமாதனம் ஏற்படும் சகுனமா!
மனித அழிவுகள் நிற்கும் நேரமா!

ஓராயிரம் காகங்கள் பாடி மகிழட்டும்.
பல்லாயிரம் நாய்கள் குரைத்துக் களிக்கட்டும்.

ஒரு கவிஞன்;
அது நான்தான்,
தினமும் கண்ணீர் விடுகிறேன்
மனித அழிவுகளுக்காக.
இந்த காக்கை நாய்ச் சவாரி
திருப்தி தருகிறது
பார்க்க.

**சோலைக் கிளி**

( 7ம் பக்க தொடர்ச்சி )

குணேவின் மூன்றாவது சிறைவாசம் மிக நீண்டது. 1974 இலிருந்து அவர் சிறையிலிருந்து தப்பித்து நாட்டை விட்டு வெளியேறும் காலமான 1981 வரை 7 ஆண்டுகள் நீண்டது.

1978–1979 ஆம் ஆண்டுகளில் சிறைக்குள் இருந்தவாறுதான் The Herd (ஆட்டிடையன்) The Enemy (பகைவன்) போன்ற படங்களுக்கான கதை வசனமும் Yol (பாதை) படத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் குணேவினால் மேற்கொள்ளப்பட்டது.

1980 ஆம் ஆண்டு, Yol படத்திற்கான படப்பிடிப்பை முடித்துக்கொண்டு அதன் முதல் பூர்வாங்கப் பிரதி நாட்டிலிருந்து ரகசியமாக கடத்தப்பட்ட பின்பு, பிரான்ஸிற்கு வெளியேறினார். சுவிட்சலாந்தில் அந்த படத்தின் எடிட்டிங் வேலைகள் முடித்து, 1983ஆம் ஆண்டு நடைபெற்ற கேனஸ் உலகத்திரைப்பட விழாவில் தங்க விருதைப் பெற்றது அப்படம்.

குணேவின் இறுதிப்படமான The Wall (சுவர் அல்லது மதில்) 1982 ஆம் ஆண்டு பிரான்ஸில் படமாக்கப்பட்டது. குணேவின் பாஷையில் அப்படம் 'பாஸிஸ்ட் சர்வாதிகாரத்தின் முகத்தில் ஓர் அறை' போன்றது.

குணேவின் அரசியல் அகராதியில் துருக்கியின் ஜனநாயக விரோத அரசியல் 1923ஆம் ஆண்டு தொடங்குகிறது.

அந்த ஆண்டுதான் ஓட்டோமான் பேரரசிலிருந்து துருக்கியை விடுவித்து குடியரசை நிறுவினார் ஆதா துர்க். இன்றளவும் துருக்கியின் தேசத் தந்தை ஆதா துர்க்தான். துருக்கியின் வரலாறு ராணுவ அடக்கு முறையின் வரலாறு. இன்றளவும் துருக்கியில் கொம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டுத்தான் இருக்கிறது. மார்க்ஸீய புத்தகங்களுக்கும் தடை தொடர்ந்து நீடிக்கிறது.

ஆதா துர்க்கை சர்வாதிகாரி என்று வரையறை செய்கிறார் குணே. குணேவின் படங்களிலிருந்து பெறப்படும் துருக்கி இன்றைய யதார்த்தமும் கூடத்தான். தொடர்ந்து மேற்கத்திய மதிப்பீடுகளுக்குள் தன்னை இருத்திக் கொள்ள விரும்பும் நாடு. ஐரோப்பிய சமூக கட்டமைப்பின் (European Community) அங்கத்தவராக விண்ணப்பித்திருக்கும் நாடு.

குணேவின் படங்களைப் பற்றி அறிமுகமோ விமர்சனமோ கூட அரசியல் சார்புகளுக்கு ஏற்பவே வெளிப்படும்.

நிஜத்தில் மேற்கத்திய அழகியல், சினிமா அரசியல் வரையறைகளுக்கும் ரசனைகளுக்கும் எதிராக மூன்றாம் உலக யதார்த்தத்துடன் நமது சொந்த அழகியல், அரசியல் ரசனைகளை உருவாக்கிக் கொள்வது முக்கியம்.

குணேவைப் பற்றிய மேற்கத்திய விமர்சகர்களின் விமர்சனமானது அவர் படங்களில் வரும் மனிதர்கள் தவிர்ந்த புல்வெளிகள், பனித்தரைகள், அகண்ட வானத்தின் கீழ் விரியும் பாதைகள், ரயில் பிரயாணத்தின் அழகு போன்றவை குறித்ததாகும்.

ஆனால் குணேவின் இயற்கை, மனிதர்களின் சந்தோஷத்துடனும் துயரத்துடனும் தொடர்புடையது. குணேவை வெறுமனே சினிமாக்காரராகப் புரிந்து கொள்வது இயலாதது. குணேவின் சினிமா அவரின் விடுதலை சார்ந்த அக்கறைக்கான சாதனம்.

குணே பற்றின அறிமுகம் என்பது இரண்டு தளங்களிலேயே நிகழ முடியும்.

ஒன்று, மனிதனாக அவருக்குள் உருவான மானுட விடுதலைத் தத்துவக் கண்ணோட்டம்.

இரண்டாவதாக, இந்த விடுதலைக் கண்ணோட்டத்தை முயற்சித்துப் பார்த்த சினிமா சாதனம். கட்டுரையும் இந்நோக்கில் இரண்டு கட்டங்களாகவே விரியும்.

முதலாவதாக அவரது படைப்புலகின் ஆதாரங்களுக்கான வாழ்வனுபவங்கள் பற்றியது. இறுதியில் அவர் படைப்புகள் பற்றியது.

துருக்கிய சினிமாவில் இரண்டு வகையான போக்குகளைக் காண்கிறார் குணே. இந்தப் போக்குகள் எந்த நாட்டிலும் அரசியலிலும் சினிமாவிலும் பொதுவானதுதான்.

ஒன்று மேற்கத்திய ஹொலிவூட் கனவுலக சினிமா அரசியல் அதிகாரத்தை மையமாகக் கொண்ட

சினிமா, மற்றையது தேசிய மரபுகளை உட்கொண்டு தனித் தன்மையுடன் வளர எத்தனிப்பது.

இந்த இரண்டாவது தனித் தன்மையை சினிமாவில் எவ்வாறு கையாளுகிறார் என்பதுவே முக்கியம்.

''சினிமா பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் புத்திக்கும் நான் என்னை வெளிக்காட்டுகிறேன். அதே சமயத்தில் பார்வையாளர்களுக்கு தங்கள் சொந்த யதார்த்தம் பற்றிய புரிதலை தொடர்பு கொள்ளவும் முயல்கிறேன்" என்கிறார் குணே.

தேசிய அளவில் மக்களுடன் சினிமா மூலம் நட்சத்திர அந்தஸ்த்தைப் பெற்ற பின்பு குணே அடுத்த கட்டத்துக்குப் போகின்றார்.

"விவசாயிகள் திரைக்குள் நுழைகிறார்கள், நிலப்பசி கொண்ட விவசாயிகள் அணிதிரண்டு போகிறார்கள், வேலை தேடி நகரம் வந்து குவிகிறார்கள், எல்லைகளில் விவசாயிகள் கடத்தல் காரர்களாகிறார்கள், கொலை செய்கிறார்கள்.இம் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ அவ்வாறே என் சினிமாவுக்குள் நுழைந்தார்கள்" என்கிறார்.

நண்பரொருவர் குணேவிடம் கேட்கிறார்: "உங்கள் கதாநாயகர்கள் எவ்வாறு வித்தியா சமானவர்கள் என்று சொல்வீர்களா?" குணே சொல்கிறார்: "மரபுரீதியான கதாநாயகனை நான் நிராகரிக்கிறேன். எனது புதிய கதாநாயகன் அநீதியை எதிர்ப்பவன், அடக்கப்பட்டவன். அடக்குமுறைக்கு எதிரானவன் எனும் அர்த்தத்தில் சுதந்திரத்தின் குறியீடாகிறான்.

இந்த மாதிரியை ஒரு தொடக்கமாக நான் தேர்ந்தேன். ஆனால் இந்தப் புதிய மாதிரிகள் தோற்றுப் போகிறார்கள்.

அவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள் என்றால் அவர்கள் தனிமைப்பட்டிருப்பதால், எனது படங்களின் கதாநாயகர்கள் ஒரு போதும் வெற்றி பெறுவதில்லை. இந்தக் கதாநாயகன் தண்டிக்கப்பட்டு அழிக்கப்படுகிறான் ஏனென்றால் அவன் இயக்க பூர்வமாகத் தன்னை திரட்டிக் கொள்ளவில்லை.

இவன் தன் சொந்தத் தீர்வுகளைத் தேடிப்போனான், மக்களோடு தொடர்பில்லாது போனான். இதைத்தான் நான் முதன்மையாகக் கொண்டிருந்தேன். தனிநபர் கிளர்ச்சியை/தீர்வை கடுமையாக மறுதலித்தேன்.

ஒரு கோசத்தின் மூலம் இதை நான் சொல்வதானால் இவ்வாறு சொல்லலாம்: "தனிநபர் தீர்வு என்பது இல்லை. தனிநபர் விடுதலையின் பாதை என்பது சவக்குழிதான்."

□ □ □

## இரவும் பகலும்

நிசப்தமான அந்த இரவுகளிலெல்லாம்
எனது நித்திரை மறுக்கப்பட்டது.

எங்கோ உத்துப்பார்க்கும் பூனைப்படம்
வழுக்கி விழும் மீன் ரின்
கலர் கலராய் விரியும் விசுக்கோத்து
ஒவ்வொரு இரவும்
பேணிகளின் அணிவகுப்பு.
அலுத்துப் போனது
செய்ததை, செய்ததை....
செய்ய.

முழித்துக்கொண்டே கனவு கண்டு
அந்த கனவுக்குள்ளே முழித்திருந்து
முடிந்த ஒரு வேலை இரவு.

போனதுபோக மீதிக் கனவைச் சுமந்து
வந்து விழுந்தேன் படுக்கையில் நான்.

தூங்கிக்கொண்டு கனவைத் தேடி
அந்தக் கனவுக்குள்ளே தூங்கித் தூங்கித்
தொலைந்து போனது
இருந்த சொற்ப பகலும்.

இப்படித்தான்,
ஒவ்வொரு பட்டப்பகலிலும்
எனது வாழ்க்கை பறிக்கப்படுகிறது.

**கீரன்**

# ரெலிப்பாஸ்போட்
# TELEPASSPORT

**நீங்களும் ரெலிப்பாஸ்போட் மூலம் குறைந்த செலவில் வெளிநாடுகளுக்கு கதைக்கலாம்.**

**ரெலிப்பாஸ்போட் விண்ணப்பங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்**

## குமார்
## 081 - 521 9667

**5 நிமிடங்களுக்கான கட்டணம்**

| | AT&T | C&W | BT | INTERGLOBE (Mercury) | TELEPASSPORT |
|---|---|---|---|---|---|
| இலங்கை இந்தியா | £11.98 | £8.40 | £6.83 | £6.62 | £4.73 |
| கனடா அமெரிக்கா | £4.35 | £4.20 | £4.60 | £2.80 | £1.73 |

* ரெலிப்பாஸ்போட் கட்டணங்களுக்கு VAT அறவிடப்படுவதில்லை.

# YRE Demonstration

# CLOSE DOWN THE BNP HQ

Youth Against Racism in Europe




## Saturday 16th Oct



**Winns Common**
**Plumstead**
**London SE18**

Nearest Stations: Plumstead, trains from London Bridge
Buses: 53 from Woolwich Arsenal

## Assemble 1pm

Supported by:
Rolan Adams Family Campaign, Rohit Duggal Family Campaign, ANL, Searchlight, IRSF, Indian Workers Association, Bernie Grant MP, Militant Labour

**Contact YRE on 081 533 4533**